விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 30 திங்கட்கிழமை (12.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## தனிப் பெரும்பான்மையில்லாததால்
# கூட்டு ஆட்சிக்கு கடும் முயற்சி!
## தொங்குநிலையில் வடக்கின் முக்கிய சபைகள்

**(யாழ்ப்பாணம்) முதன்முறையாக நடைபெற்று முடிந்த கலப்பு முறையிலான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கில் பெரும்பாலான சபைகள் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எந்தக் கட்சியும் தனித்து பெரும்பான்மை வெற்றி பெறாததாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டாட்சி அமைக்க அனைத்து கட்சிகளும் கடும் முயற்சி செய்து வருகின்றன.(23-ம் பக்.)**

| கட்சிகள் | ஆசனம் |
|---|---|
| பொதுஜன பெரமுன | 2446 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1614 |
| ஜே.வி.பி | 349 |
| சுதந்திரக் கட்சி | 291 |
| த.தே.கூட்டமைப்பு | 217 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 21 |

## பேரணிகளுக்கு தடை பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

2018ம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள் வெளியாகிய நிலையில் பேரணிகள் செல்வது மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுவது போன்றவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். அதேநேரம் தேர்தலுக்கு பிந்திய காலப்பகுதியில் அமைதியான நிலைமை காணப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## குலுக்கல் முறையில் காங்கிரஸ் வெற்றி

கலப்பு முறையில் இடம்பெற்ற முதலாவது உள்ளூராட்சி தேர்தலில் குலுக்கலில் வேட்பாளர் வெற்றி பெற்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட குப்பிளான் வட்டாரத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன சம அளவிலான வாக்குகளைப் பெற்றுக் கொண்டன. இரண்டு கட்சிகளும் 314 வாக்குகள் பெற்றன. இதனால் குலுக்கல் முறையில் வட்டார வெற்றியாளரை தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டதால் எல்லோர் முன்னிலையிலும் குலுக்கல் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார். (ம)

## நல்லாட்சி அரசில் ஓரிரு நாளில் அதிரடி மாற்றங்கள் - மைத்திரி

3-ம் பக்கம் பார்க்க

## இரண்டு பிரதேச சபைகள் ஈ.பி.டி.பி வசமாகியது

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அனைத்து சபைகளிலும் கணிசமான ஆசனங்களைப் பெற்று வெற்றியை தக்க வைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் போட்டியிட்டு 23☛

## வரலாற்றில் முதற்தடவையாக மாத்தறை மாவட்டத்தில் இரண்டு தமிழர் தெரிவு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வரலாற்றில் முதற்தடவையாக மாத்தறை மாவட்டத்தில் இரண்டு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் கொட்டப்பொல பிரதேச சபையில் போட்டியிட்ட நாகவேலு ராஜ்குமார் 23☛

## மகிந்த வரலாறு காணாத வெற்றி தேசிய அரசியலில் பாரியதாக்கம்



### பல சபைகளில் தனித்து ஆட்சி

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாரிய வெற்றியை பெற்றுள்ளது.

இவ்வெற்றியானது வரலாறு காணாத வெற்றியாகும். இதன் மூலம் அரசாங்கத்துக்கான மக்கள் ஆதரவு இல்லாது போயுள்ளது. ஆகவே அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் 24☛

## மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு தலைவணங்குகின்றோம்
### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு நாம் தலைவணங்குகின்றோம். மக்கள் எமக்கு வழங்கிய எச்சரிக்கையாகவே தேர்தல் முடிவினை கருதுகின்றோம். இது தொடர்பில் ஆழ்ந்து சிந்தித்து எமது செயற்பாடுகளை சரியான முறையிலும் வேகமாகவும் முன்னெடுக்க நாம் பாடுபடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் சமூக பொருளாதார மற்றும் 24☛

## தமிழ் மக்களின் தீர்வுக்காக கட்சிகள் இணையவேண்டும்
### த.தே.கூட்டமைப்பு வலியுறுத்து


(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை பெறுவதற்காக கொள்கை அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் தற்போது ஒன்றாக பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது வலியுறுத்தியுள்ளது.

மேலும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாம் சில சொற்களின் அர்த்தம் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்க அதே புதிய அரசியலமைப்பு நாட்டை பிரிக்க போகின்றது என்ற அடிப்படையில் அதனை சிங்கள மக்கள் நிராகரித்துள்ளார்கள்.

இந்நிலையில் மகிந்த அணியால் தெற்கில் ஏற்படுத்தப்பட் 23☛

## அரசின் நிகழ்ச்சி நிரலில் செயற்படாமல்
## கூட்டமைப்பின் தலைமை மாறினால் சேர்ந்து பயணிக்கலாம்: கஜேந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டும், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு இணங்கியும், இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் கூட்டமைப்பை விட்டு வெளியேறுகின்ற போதே நாம் கூட்டமைப்போடு சேர்ந்து பயணிப்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்து 23☛

**Sales & Marketing Executive**
**LassanaFlora -Jaffna Showroom**

We Seeks Energetic individual with passion to Join our sales team Jaffna LassanaFlora Branch as Sales and Marketing Executives.

**Minimum Qualifications**
- Age Below 27 years
- Good written and Verbal in English and Tamil
- Experience in Sales and Marketing will be an advantage
- Willing to work long hours

**The Following Awaits for the Right Candidate**
- Attractive Performance Based incentive schemes
- Training and Development
- Opportunities for Career enhancement

இயற்கை பூக்களிலான மலர்ச்செண்டு. பூக் கூடை மற்றும் திருமண அலங்காரங்கள் தொடர்பான வேலைகளுக்கு ஆர்வம் உள்ளவர்கள் தேவை.

If you think you are the right person, email your CV citing 2 non-related referees with in 7 days of this advertisement to
**lfjaffna@gmail.com** Mobile - 0764463700

(2727)


# தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தேவை உணர்ந்து செயற்பட வேண்டும்

(மட்டக்களப்பு)

தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் தேவைகளை உணர்ந்து தூய்மையான வகையிலும் பக்கச்சார்பற்ற வகையிலும் மக்களுக்கு சேவையாற்றவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தலுக்கான அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியாலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து வெளியிடுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சுமுகமான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்த தேரதலை சுமுகமாக நடத்துவதற்கு பலர் பல வழிகளிலும் உதவியிருந்தனர்.

தேர்தல் கடமைகளுக்காக 4443 உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதேபோன்று 1900பொலிஸாரும், பாதுகாப்பு கடமைகளுக்கு அழைக்கப்பட்டிருந்ததோடு விசேட அதிரடிப்படையிரும் பாதுகாப்பு பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர். விசேடமாக ஊடகவியலாளர்கள் தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை மக்கள்மத்தியில்கொண்டு சென்று அவர்களை அறிவூட்டியதுடன்சுமுகமான முறையில் வாக்களிக்க தூண்டியதற்காகவும் ஊடகவியலாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என உதயகுமார் தெரிவித்துள்ளார். (ம)


**வேலைவாய்ப்பு**


பயிற்சி பெற்ற
தாதியர் தேவை.
தொடர்பு:-
**0778730129**

(2743)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி
**த.துவாரகன்** (L.L.B Hons)
உடுவில் 11ஆம் வட்டாரம்
அமோக வாக்குகளால் வெற்றி பெற்ற
தவராஜா துவாரகன் அவர்களுக்கு
கனேசா ஹாட்வெயார்
(342 K.K.S Road, Maruthanar Madam)
சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.



கனேசா ஹாட்வெயார்
342 K.K.S Road, Maruthanar Madam

(2740)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
**T.பிரகாஷ்**
(ஏழாலை 1ஆம் வட்டாரம்)
அமோக வாக்குகளால் வெற்றி பெற்ற
தியாகராசா பிரகாஷ் அவர்களுக்கு
கணேசா ஹாட்வெயார் (342, K.K.S Road,
மருதனார்மடம்) சார்பாக
வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்



கணேசா ஹாட்வெயார்
342, K.K.S Road, மருதனார்மடம்

(2740)


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1948
-
09
-
27



இறப்பு
2009
-
02
-
12

### கந்தையா மேரிலூத்து (பூமணி)

(யாழ்ப்பாணம், நல்லூர்)

ஆண்டுகள் ஒன்பது
ஓடி மறைந்ததுவே-உம்
அன்பு முகம் காண
ஏங்கி நிதம் தவிக்கிறோம்
காலமொன்று வரும்
எமக்காய் எம்முடன் நீர்
மீண்டும் அவதரிப்பீர் எனும்
அசையாத நம்பிக்கையுடன்
வாழ்கின்றோம் அம்மா

(F-1567)

மணியம்மா உணவகம்
ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்:கலா, ஈசன்




சைவநெறிக்கூடம்

அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர்
திருக்கோவில்
இணுவில் தெற்கு, யாழ்ப்பாணம்

## பெருஞ்சிவனிரவு

(மகா சிவராத்திரி விரதம்)

**13.02.2018 செவ்வாய்க்கிழமை**

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
(திருமந்திரம் - திருமூலர்)

அன்புடையீர்,

கருவறையில் செந்தமிழ் வழிபாடு நடைபெறும் 'அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலிலே எதிர்வரும் கும்பத்திங்கள் முதலாம் நாள் (13.02.2018) செவ்வாய்க்கிழமை அன்று செந்தமிழுக்கு கழகம் கண்ட எம்பெருமானின் பெருநோன்பாகிய மகா சிவராத்திரி விரதம் என்று அழைக்கப்படும் பெருஞ்சிவனிரவு சிறப்பாக நடைபெற குருவருளும் திருவருளும் நிறைந்தே கைகூடியுள்ளது.

**அன்றைய தினம்,**

- நாள்முழுவதும் அடியார்கள் தங்கள் கரங்களினால் எம் பெருமானுக்குத் திருமஞ்சனம் (அபிடேகம்) செய்து வழிபாடு ஆற்றலாம்.
- இரண்டாம் கால வழிபாட்டினைத் தொடர்ந்து 1008 சிவனடியார்கள் பால்செம்பு கொண்டு திருமஞ்சனம் ஆற்றலாம்.(பங்குபெற விரும்பும் அடியார்கள் திருக்கோவிலில் முற்பதிவு செய்யவும்)
- நான்கு காலங்களிலும் நான்மை வகை வழிபாடுகள் இடம்பெற்று நால்வகை அருளமுது படைக்கப்படும்.
- எம்பெருமானின் புகழ்பரப்பும் முத்தமிழ் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் கண் துஞ்சாது நோன்பில் ஈடுபடும் சிவனடியார்களுக்கு திருக்கோவிலில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிவனடியார்கள் இப்பெருஞ்சிவனிரவில் கலந்து கொண்டு எம்பெருமானை தெய்வத் தமிழில் வழிபட்டு அருள் நிறையப்பெற்றுய்ய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

தொலைபேசி இல: 0212243545
மின்னஞ்சல்: gnanalingechurarinuvil@gmail.com
முகப்புத்தகம் :https://www.facebook.com/gnalinkeswarar/

அனுசரணை:வைரஸ் பிறிண்டேர்ஸ்
மக்கள் வங்கி கட்டடத் தொகுதி,
கே.கே.எஸ் றோட், இணுவில்.

S.K Design

இவ்வண்ணம்,
சைவநெறிக்கூடம்,
அருள்மிகு ஞானலிங்கேச்சுரர்
திருக்கோவில்,
இணுவில்.

(2738)

## தோல்வி எதிரொலி

# சு.க. அமைச்சர்களுடன் ஜனாதிபதி அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய சந்திப்பொன்றில் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இச்சந்திப்பு நேற்று நண்பகல் நடைபெற்றது.



உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெரும் எண்ணிக்கையிலான தொகுதிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழந்துள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஜனாதிபதி அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடனும் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆதரவு பொதுஜன பெரமுன முன்னிலையில் உள்ளதோடு, ஐ.தே.க. இரண்டாம் இடத்தில் உள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்து அமுலில்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அனைத்து முடிவுகளும் நேற்று ஞாயிற்றுக் கிழமை நண்பகலுக்கு முன்னர் வெளியாகி விடும் என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்திருந்தார்.

இந் நிலையில் பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸாரின் ரோந்து அணியினரும் கலகம் அடக்கும் குழுவினரும் பாதுகாப்பில் ஈடுபட - வீதித் தடை பாதுகாப்பு நடவடிக்கைகளும் தொடரும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அத்துடன் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நாடு பூராகவும் உள்ள 42 பொலிஸ் பிரிவுகளில் தேர்தல் கடமைகளுக்காக 65000 இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் சுமார் 5900 பேரும் விஷேட அதிரடிப் படையின் 4000 பேரும் சேவையில் இணைத்துக் கொள் ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஆட்சியிலிருந்து விலகுமாறு அழுத்தம் தலைமைப் பொறுப்புக்கும் குறிவைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள ஆணையை ஏற்று அரசாங்கம் பதவி விலக வேண்டுமென கூட்டு எதிரணி அழுத்தம் கொடுத்து வருகின்றது.

கடந்த தேர்தலில் தற்போதைய அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையை மக்கள் நீக்கியுள்ளனர் என்றும், அதன் பிரகாரம் மகிந்தவிடம் ஆட்சியைக் கையளிக்க வேண்டுமெனவும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.



அத்தோடு, ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் இணைந்த கூட்டரசாங்கத்தை மக்கள் நிராகரித்துள்ளனர் என பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதியின் சொந்த மாவட்டமான பொலநறுவையிலேயே அவரால் பெரும்பான்மையை பெற முடியவில்லையென தெரிவித்துள்ள ஜி.எல்.பீரிஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (இ)

## ஆட்டம் காணும் கூட்டரசாங்கம்

### பதவி விலக பலர் தீர்மானம்





(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள், அரசாங்கத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தற்போதைய நிலவரத்தின் பிரகாரம் பொதுஜன பெரமுன முன்னிலையில் உள்ளது. இந்நிலையில், இறுதித் தேர்தல் முடிவு வெளியானதும் சு.க. உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்திலிருந்து விலகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 உறுப்பினர்கள் தமது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, தம்முடன் இணைந்து பணியாற்றுபவர்களை இணைத்துக் கொள்ள தயாராக இருப்பதாகவும், அவர்களுக்காக தமது கட்சியின் கதவு திறக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## புதிய அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி முன்வர வேண்டும்

### பிரசன்ன ரணதுங்க வலியுறுத்து



(கொழும்பு)

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன், மக்களின் அபிப்பிராயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும் என்றும், பிரதமரை பதவி நீக்கிவிட்டு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளை வெளியிட்ட பத்தலகெதர வித்தியாலய மத்திய நிலைய வளாகத்தில் வைத்து நேற்றுப் பிற்பகல் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ)

# பிரிமியர் லீக் கால்பந்து

# மன்செஸ்டர் சிட்டி வெற்றி; ஆர்சனல் தோல்வி



ஆர்சனல் - ஹொட்ஸ்பர் ஆட்டத்தின்போது...

மன்செஸ்டர் சிட்டி - லெய்செஸ்டர் ஆட்டத்தின் போது...

பிரிமீயர் லீக் கால்பந்து தொடரின் நேற்றைய ஆட்டம் ஒன்றில் மன்செஸ்டர் சிட்டி வெற்றி பெற்றதுடன் இன்னொரு ஆட்டத்தில் ஆர்சனல் தோல்வியடைந்தது.

பிரிமீயர் லீக் கால்பந்து தொடரில் ஒரு போட்டியில் ஆர்செனல் - டொட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் ஹொட்ஸ்பர் அணியின் நட்சத்திர வீரர் ஹரி கேன் தலையால் முட்டி கோல் அடித்தார்.

அதன்பின் இரு அணி வீரர்களும் கோல் அடிக்காததால் டொட்டன்ஹாம் ஸ்பர்ஸ் அணி 1-0 என ஆர்செனலை வீழ்த்தியது.

மற்றொரு ஆட்டத்தில் மன்செஸ்டர் சிட்டி லெய்செஸ்டர் சிட்டியை எதிர்கொண்டது. இதில் மன்செஸ்டர் சிட்டி 5-1 என லெய்சஸ்டர் சிட்டியை துவம்சம் செய்தது.

மன்செஸ்டர் சிட்டி அணியின் செர்ஜியோ அக்யூரோ நான்கு கோல்கள் அடித்து அசத்தினார்.

மற்றொரு கோலை ரஹீம ஸ்டெர்லிங் அடித்தார். லெய்செஸ்டர் சிட்டி அணியின் வார்டி 24-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

மற்றைய ஆட்டங்களில் எவர்டன், வெஸ்ட் ஹாம், ஸ்வான்சீ அணிகள் வெற்றி பெற்றது. ஸ்டோக் - பிரைட்டன் இடையிலான ஆட்டம் 1-1 என சமநிலையில் முடிந்தது.

மன்செஸ்டர் சிட்டி 57 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. மன்செஸ்டர் யுனைடெட் 56 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் டொடடன்ஹாம் ஹொட்ஸ்பர் அணி 52 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளது. ஆர்செனல் 45 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் உள்ளது.

## முனை மழுங்கிய இரட்டை சுழல் துப்பாக்கிகள்

# ஜொகன்னஸ்பேர்க் தோல்விக்கு என்ன காரணம்?



ஜொகன்னஸ்பேர்க் ஒரு நாள் போட்டியில் இந்திய அணியின் வெற்றி நழுவியதற்கு மழை குறுக்கீட்டுடன் சுழற்பந்துவீச்சாளர்களின் மோசமான செயற்பாடு முக்கிய காரணமாக அமைந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 6 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் நான்கு போட்டிகளின் முடிவில் இந்திய அணி, 3-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

ஜொகனஸ்பேர்க்கில் நேற்று நடந்த 4ஆவது ஒரு நாள் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இந்திய அணிக்கு ஷிகர் தவான் (109), அணித் தலைவர் ஹோலி (75) கைகொடுக்க, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்கள் எடுத்தது.

**கிலாசன் விளாசல்**

பின் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 7.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 43 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மின்னல் மற்றும் மழையால் போட்டி சிறிது நேரம் தடைப்பட்டது. பின், 'டக்வொர்த் லூயிஸ்' முறைப்படி 28 ஓவர்களில் 202 ஓட்டங்கள் என இலக்கு மாற்றப்பட்டது. அம்லா (33), டி வில்லியர்ஸ் (26) நம்பிக்கை அளித்தனர்.

இந்திய பந்துவீச்சை புரட்டியெடுத்த டேவிட் மில்லர் (39 ஓட்., 28 பந்து), ஹெயின்ரிச் கிலாசன் (43* ஓட்., 27 பந்து), பெலுக்வாயோ (23* ஓட்., 5 பந்து) கைகொடுக்க, தென்னாபிரிக்க அணி, 25.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

**தோனி மந்தம்**

இந்திய அணியின் தோல்விக்கு மின்னல் மற்றும் மழை முதல் காரணம். இந்திய அணி, 34.2 ஓவர்களில், 2 விக்கெட்டுக்கு 200 ஓட்டங்கள் எடுத்து நல்ல நிலையில் இருந்தது. இதனால் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

அப்போது மின்னல் காரணமாக போட்டி சிறிது நேரம் தடைப்பட்டது. மீண்டும் போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில் தவான் (109) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரகானே (8), ஸ்ரேயாஸ் ஐயர் (18), ஹர்திக் பாண்டியா (9), சொற்ப ஓட்டங்களில் வெளியேற, கடைசி கட்டத்தில் தோனி (42 ஓட்., 43 பந்து) மந்தமாக ஆட, இந்திய அணியால் 289 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

**சகால் சொதப்பல்**

சகாலின் நிலைதான் பரிதாபம். இவர் வீசிய 18 ஆவது ஓவரின் 3ஆவது பந்தில் டேவிட் மில்லர் கொடுத்த பிடி வாய்ப்பு வீணடிக்கப்பட்டது. பின், அதே ஓவரின் 6ஆவது பந்தை இவர், 'நோபோலாக' வீசியதால், 7 ஓட்டங்களில் கண்டம் தப்பிய மில்லர், 39 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கை அளித்தார். மொத்தம் 5.3 ஓவர் வீசிய சகால், 68 ஓட்டங்களை வாரி வழங்கிஒரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தினார்.

மறுபுறம் குல்தீப் யாதவ், 6 ஓவர்களில் 51 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இவர்கள் இருவரும் சேர்ந்து, 11.3 ஓவர்களில் 119 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இந்திய அணியின் களத்தடுப்பு சிறப்பாக இல்லை. அடுத்த இரு போட்டிகளில் சுதாகரித்துக் கொண்டால், தொடரை கைப்பற்றி சாதனை படைக்கலாம்.

**மீண்டு வருவர்**

இந்திய அணியின் தொடக்க வீரர் ஷிகர் தவான் கூறுகையில், " மழையால் ஆடுகளத்தின் தன்மை மாறிப் போனது. சுழல்பந்துவீச்சாளர்கள் பந்தை நன்கு பிடித்து பந்துவீச முடியவில்லை. அடுத்து வரும் போட்டிகளில் சகால், குல்தீப் எழுச்சி காண்பர் என, நம்புகிறேன். எனது நூறாவது போட்டியில் சதமடித்தது மகிழ்ச்சி," என்றார்.

**வீணான வாய்ப்பு**

இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி கூறுகையில், "பொதுவாக, எந்த ஒரு போட்டியாக இருந்தாலும் ஒவ்வொரு அணிக்கும் வெற்றி பெற சில வாய்ப்புகள் கிடைக்கும். இதனை வீணடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போட்டியில், எங்களுக்கு கிடைத்த பிடி வாய்ப்புகளை கோட்டைவிட்டோம. இதனால் வெற்றியை நழுவவிட்டோம். தவிர, நன்றாக சென்று கொண்டிருந்த இப்போட்டி மழையால், 'ரி20' போல மாறிவிட்டது," என்றார்.

**ஹோலி தவறான வியூகம்**

தென்னாபிரிக்க வீரர் கிலாசன் கூறுகையில், "இந்திய அணியின் தலைவர் ஹோலியின் பந்துவீச்சு வியூகம் வியப்பளித்தது. மில்லரும், நானும் துடுப்பாட்டம் செய்துகொண்டிருந்த போது, சிறப்பாக பந்துவீசிய வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர், பும்ராவுக்கு வாய்ப்பு வழங்காமல, குல்தீப், சகால் என சுழற் பந்துவீச்சாளர்களை பந்துவீச வைத்தார். இது எங்களுக்கு வியப்பைத் தந்தது. இந்த வெற்றி அடுத்து வரும்போட்டிகளில் சாதிக்க ஊக்கமாக அமையும் என எதிர்பார்க்கிறேன்," என்றார்.

**தென்னாபிரிக்க அணிக்கு அபராதம்**

இப்போட்டியில், ஒரு ஓவர் தாமதமாக பந்துவீசிய தென்னாபிரிக்க அணியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அணித் தலைவர் மார்க்ரமுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 20 சதவீதமும் மற்றைய வீரர்களுக்கு தலா 10 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்த 12 மாதங்களுக்குள், தென்னாபிரிக்க அணி, மீண்டும் தாமதமாக பந்துவசினால் அணித் தலைவருக்கு தடை விதிக்கப்படும்.

**'பிங்க்' போட்டி நிதி**

மார்பக புற்றுநோயால் ('கான்சர்') பாதிக்கப்பட்டோருக்கு உதவும் வகையில், நான்காவது ஒருநாள் போட்டி நடந்தது. இதில் தென்னாபிரிக்க அணியினர் 'பிங்க்' நிற 'ஜெர்சி' அணிந்து விளையாடினர். இப்போட்டியில் வீரரகள் அடிக்கும் பவுண்டரி, சிக்ஸர் மற்றும் 'கேட்ச்' போன்றவற்றுக்கு சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நிதி வழங்கின. இதன் மூலம கிடைத்த ரூ. 90 லட்சம், 'கான்சர்' நல நிதிக்கு வழங்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

## திருமதி செபஸ்தியாம்பிள்ளை விக்ரோறியா (மல்லிகா)



*பழைய வேதக் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபஸ்தியாம்பிள்ளை விக்ரோறியா (மல்லிகா) நேற்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற மடுவிலார் - ஓூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜோசப் - எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகளும் செபஸ்தியாம்பிள்ளையின் (பாலன்) பாசமிகு மனைவியும் மரியசதாநாயகி (பிள்ளை), ஜோசப் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), மரியதேவநாயகி (தங்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றொபேட் றெஜி (விசியன்), கலைவாணி, யூட்றொகி ராகவன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் யூட்கமிலஸ், டினோஜன், டிறுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (12.02.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பழைய வேதக் கோவிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.* (C-1568)

பழைய வேதக்கோவிலடி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:- செ.ஜோசப் (மகன்)
077 978 9539

# மக்கள் மனங்களை வென்றவர் மறையப்போவது இல்லை!

## மகிந்த விசேட அறிக்கை- அரசு பழிவாங்கியதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் மனங்களை வென்றவர்கள் என்றும் மறையப்போவது கிடையாது. நல்லாட்சி அரசாங்கம் எம்மை பழிவாங்கினாலும் நாட்டு மக்கள் கைவிடவில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



நல்லாட்சி அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள பற்று தற்போது வெளிப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பெறுபேறுகள் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் நாட்டு மக்கள் பல்வேறு தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குள்ளாகி வந்தனர். தொடர்ச்சியான பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாற்றம் கண்டு வந்தனர்.

தமது வாழ்க்கையின் அடிப்படை உரிமைகளையும் பல துயரங்களையும் அனுபவித்த மக்களின் ஆதரவின் பிரதிபலனே இந்த வெற்றி. மக்களின் மனங்களை வென்றவர்கள் என்றும் மறையப்போவது கிடையாது என்ற விடயத்தினை நல்லாட்சி அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் புரிய வைத்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இந்த வெற்றி பாரிய அபிவிருத்திக்கான ஒரு பாதையினை உருவாக்கி கொடுத்துள்ளது. இதனை பயன்படுத்தி எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்தி மற்றும் அரசியலிலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்த பொது மக்கள் தொடர்ந்தும் தமது ஆதரவினை வழங்க வேண்டும் என தெரிவித்தார். (இ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 15.01.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் இராமு.ஜெகதீஸ்வரநாதன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.02.2018 நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மறு நாள் 14.02.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது ஞானசாரியர் வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஞானசாரியர் வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்
021 226 2051

(2729)


Yarl International College Of Skills Development

YICSD COLLEGE

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!



அழகுக்கலை
கேக் ஐசிங்
20% OFF
தையல்



பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
#அழகுக்கலை பயிற்சிகள் யாவும் Yarl Beauty உடன் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.
சனி, ஞாயிறு பிரிவு 17,18/02/2018 அன்று 10.00 மற்றும் 02.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவு 16,19/02/2018 அன்று 10.00 மற்றும் 02.00 மணிக்கு
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

YICSD COLLEGE YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)


## இராசி பலன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆசியைப் பெறுவீர்கள்.

**இடபம்:** அல்லல்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், நண்பர்களால் ஒரு சில நன்மைகள் நடைபெறலாம், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சுக், புத | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை | | ராகு |
| சூரி, கேது | | | |
| சனி, சந் | செவ் | குரு | |

12.02.2018
தை 30, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.51 மணிவரை
பூராடம் பின்னிரவு 3.37 மணிவரை
சுபநேரம் 12.34-2.04 மணிவரை
இராகுகாலம் 8.04-9.34 மணிவரை

வளவன்

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பழைய கடன்களை அடைக்க புதிய வழிகளைக் கையாள்வீர்கள், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு:** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் ஏன் இந்தத் தாமதம்

## மகிந்த தேசப்பிரிய விளக்கம்


(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற தேர்தல் வாக்களிப்பு – 2018 உத்தியோகபூர்வ தேர்தல் முடிவை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணத்தை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளாவிய ரீதியில் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் வரையிலும் குறித்த தேர்தல் முடிவுகளை முழுமையாக வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. அதற்கான காரணத்தை தேர்தல் ஆணைக்குழு தலைவர் வெளியிட்டுள்ளார்.

அதாவது அந்தந்த மத்திய நிலையங்கள் மற்றும் வட்டார வாக்குகளை எண்ணும் பணி நிறைவடைந்து பெறுபேறுகளை தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் தொலைநகல் மற்றும் தொலைபேசியினூடாக கிடைக்கப் பெற்றிருந்தபோதிலும் கையால் எடுத்துச் செல்லப்படும் பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நிலை தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஒரு வட்டாரத்தின் பெறுபேறை அறிவிக்கும் போது தபால்மூல வாக்களிப்பு பெறுபேற்றை ஒன்றிணைத்து அறிவித்துள்ள போதிலும் சில இடங்களில் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு தொலைநகல் மூலம் அவை அனுப்பப்பட்ட பெறுபேறுகளின் அறிக்கை இரண்டில் ஒன்று மாத்திரம் என்பதனால், மொத்த பெறுபேறுகளை தயாரிக்கும் பொழுது மீண்டும் மீண்டும் பரிசோதிக்க வேண்டிய நிலை தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஏற்பட்டதால் பெறுபேறுகளை அறிவிப்பதற்குமேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.



மேலும் உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து வட்டார பெறுபேறுகளையும் தெரிவத்தாட்சி அதிகாரியால் தரவுக் கட்டமைப்பிற்குள் சேர்க்கும் வரையில் அந்த உள்ளூராட்சி மன்றத்தின் மொத்த பெறுபேற்றையும் ஊடகத்திற்கு அறிவிப்பதற்குரிய சூழ்நிலை இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ-9)

# நமக்குத் தேவையான தேர்வினை பெறவில்லை

## ஜே.வி.பி. தலைவர் அநுர விரக்தி

(கொழும்பு)

நமக்குத் தேவையான தேர்வினை நாம் பெறவில்லை என உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாக்காளர் தளத்தினை மேம்படுத்தியுள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ)



# இந்திய மீனவர்கள் மூவர் விடுவிப்பு



(கொழும்பு)

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கடந்த 16ஆம் திகதி கடற்படையினரினால் கைதுசெய்யப்பட்ட 16 இந்தியர்களுள் 3 இந்தியர்கள் மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இவர்கள் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களை ஒப்படைக்கும் நிகழ்வு இலங்கை கரையோர பாதுகாப்பு பிரிவினரினால் நேற்று முன்தினம் காங்கேசன்துறை வடக்கில் சர்வதேச கடற்பரப்பில் இடம்பெற்றது. (இ-7)

# தேர்தல் விதிமுறை மீறல்கள்; நேற்று மட்டும் 20 முறைப்பாடுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் விதிமுறைகளை மீறியதாக தெரிவிக்கப்படும் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினத்தில் மட்டும் 20 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், உத்தியோகப்பற்றற்ற தேர்தல் முடிவுகளை அறிவித்தல், முடிவுகளை வெளியிட தாமதமானதற்கு போலி காரணங்களை அறிவித்தமை போன்ற காரணங்களை முன்நிறுத்தியே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது. (2)

# முதற் தடவையாக மாத்தறையில் தமிழர் ஒருவர் தெரிவானார்

(கொழும்பு)

வரலாற்றில் முதல் தடவையாக மாத்தறை மாவட்டத்தில் கொட்டப் பொல பிரதேச சபைக்கு தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் கொட்டப் பொல பிரதேச சபைக்கு போட்டியிட்ட நாக வேலு ராஜ்குமார் என்பவரே வெற்றி பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவர் 917 அதிகபட்ச வாக்குகளை பெற்றுள்ளார். (2)

# மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத் தில் மகா சிவராத்திரி விழா நாளை 13 ஆம் திகதி இடம் பெறும்.

மாலை 6 மணி முதல் விசேட பூசைகள் இடம் பெற்று இரவு 9.30 மணிக்கு நவாலியூர் ஸ்ரீ கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் "பஜனை நாமம்' இடம் பெறவுள்ளதுடன். நள்ளிரவு 12.30 மணிக்கு திருநீலகண்டர் எனும் பொருள் பற்றிய வில்லிசையும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்து ள்ளனர். (இ-9)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நல்லூர் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் மகா சிவராத்திரி விழா நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி முதல் இடம்பெறும்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.அனந்தலஷ்மி கலந்து கொள்வார். (இ-9)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மகா சிவராத்திரி விழா நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிமுதல் யாழ்ப்பாணத்திலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தெல்லிப்பழை சித்தியம் புளியடி அண்ணாமார் தேவஸ்தான மகா சிவராத்திரி விழா நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறும்.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நான்கு சாமப் பூசையும் இரவு 12 மணிக்கு இலிங்கேஸ்வர பூசையும் காலை 6.30 மணிக்கு விசேட பூசையும் பெருமாள் வெளிவீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும். (இ)

# பெண் முயற்சியாளர்களுக்கு யாழில் ஆக்கத்திறன் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்முயற்சியாளர்களுக்கு ஆக்கத்திறன் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இவ்வகையில் தெரிவு செய்யப்பட்ட 20 பெண்களுக்கு கைவினைத்திறன் பயிற்சியாக வாழ்த்து மடல், சுவர் ஓவியங்கள் போன்றவற்றில் திறன் பயிற்சியும் மேலும் தெரிவு செய்யப்பட்ட 20 பெண்களுக்கு தேங்காய் சிரட்டையில் தயாரிக்கும் கைவினைப்பொருள் பயிற்சியும் மேலும் 20 பெண்களுக்கு பற்றிக் வர்ண ஆடை தயாரித்தல் பயிற்சியும் வழங்கப்படவுள்ளன.

முதலாவது பயிற்சி 121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலைய மண்டபத்திலும், இரண்டாவது பயிற்சி கோப்பாயிலுள்ள தேங்காய் சிரட்டை பயிற்சி நிலையத்திலும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

மூன்றாவது பயிற்சி புங்குடுதீவில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிகள் குறுங்கால பயிற்சி நெறியாக ஐந்து தொடக்கம் பத்து நாட்களாக இடம் பெறவுள்ளது. இப்பயிற்சி வழங்கும் வளவாளர்கள் இரத்தினபுரியிலிருந்து வருகை தரவுள்ளனர்.

இத்திறன் பயிற்சியின் மூலம் பயிற்சிபெறும் பெண்கள் தமது உற்பத்திப் பொருட்களை சிறந்த முறையில் சந்தைப்படுத்தவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும் என எதிர்பார்க்கின்றோம் என்று மகளிர் நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-9)

# முன்னாள் அரச அதிபர் அமரர் சண்முகநாதனின் அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் அரச அதிபர் அமரர் க.சண்முகநாதனின் அஞ்சலி நிகழ்வு இன்று 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் சமூகம் மற்றும் யாழ்ப்பாண நிர்வாக சமூகத்தின் ஏற்பாட்டில் ஆறுதல் நிறுவனத்தின் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறும். (இ-9)

# அறநெறிப்பாடசாலை அங்குரார்ப்பணமும் மகா சிவராத்திரி விழாவும் நாளை

(யாழ்ப்பாணம்)

சிவன் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வும் மகாசிவராத்திரி விழாவும் நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வண்ணார் பண்ணை சிவன்கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள சிவன் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சிவன் சனசமூக நிலையத் தலைவர் க.சண்முகராஜன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்த ஆயுள்வேத யோகாசன போதனாசிரியரும், உலக யோகா கேந்திரா நிலையை இயக்குநருமான சி.உமாசுதன், விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.கௌதமன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-16 நாச்சிமார் கோயில் வீதி ஆதன இல 154/57 என்ற ஆதனம் தம்பி ஐயா பெண் சின்னம்மா கந்தன் வள்ளி பெரியானும் குழந்தையும் என்னும் பெயரில் யாழ். மாநகர சபையின் பதிவேட்டில் காணப்படுகிறது.

இல. 54/16 ஆத்தி சூடி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் கைம்பெண் சந்திரா என்பவர் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 2013.01.07 ஆம் திகதியிட்டு 6282 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரகடனப்படுத்தல் சாதன உறுதியில் 2002.09.19 திகதி 2045 ஆம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் தனது கொள் விலையானதென்றும் குறித்த 2045 ஆம் இலக்க உறுதி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் பதியப்படவில்லை என்றும் குறித்த உறுதியின் இணைப்பிரதியை காணிப்பதிவகத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 2017.03.12 ஆம் திகதியிட்டு 7712 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் மேற்படி விலாசத்தைச் சேர்ந்த நவரத்தினம் கைம்பெண் சந்திரா தனது பெறாமகளாகிய இல. 66/12, 3ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்னும் முகரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மகள் பேரின்பச்செல்வி என வழங்கும் நடராசா கைம்பெண் பேரின்பச்செல்விக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்-வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்ணை கோவிற் பற்று, வண்ணார் பண்ணை வட கிழக்கு இறை, நரியன் குன்று இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கந்தசாமி அவர்களால் 2017.06.17 திகதி 4522 இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு-1 எனச் சுட்டப்பட்ட நில.பர.00 குளி 13.50 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு- கை ஒழுங்கை

வடக்கு - கதிரவேலு பரமானந்தம் பெண் சற்குணத்தின் ஆதனம்.

மேற்கு- மிகுதி ஆதனம் .

தெற்கு- இராமசாமி சுந்தரலிங்கம் பெண் பத்மாவதியின் ஆதனம்.

தற்போது நடராசா கைம்பெண் பேரின்பச்செல்வி இவ்வாதன்த்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடராசா கைம்பெண் பேரின்பச்செல்வி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-1563)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18,மின்சார நிலைய வீதி, ஆதன இலக்கம் 21.23 என்ற இலக்கங்களையுடைய ஆதனங்கள் யாழ். மாநகரசபையின் ஆதனவரிப் பதிவேட்டில் இராஜரட்ணம் பெண் யோகாம்பிகையின் உரிமையாளர் என பதியப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மேற்கு இராசரத்தினம் திருச்செந்தூரும் பெண் ஜெயலட்சுமியும் 1982.07.30ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தசாமி கணேசானந்தன் முகதாவில் 416ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில், குறித்த ஆதனத்தில் சொரியலாக 1/2 பங்கு 1905.07.11 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆ.சிதம்பரநாதப் பிள்ளை முகதாவில் 4027 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் தங்களில் முதலாம் பெயரில் தாயார் காலஞ்சென்ற லோகம்மாவின் சொந்தமும் ஆட்சியுமானதென்றும், யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற 7370 ஆம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கின்படி தங்களில் 1ஆம் பேரின் முதுசமும் சொந்தமும் ஆட்சியு மானதும் என வெளிப்படுத்தி திருச்செந்தூர் மகள் கமலாம்பாளிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். மேற்குறித்த ஆதனத்தின் மிகுதி சொரியலான 1/2 பங்கினை குறித்த இராசரத்தினம் திருச்செந்தூரும் பெண் ஜெயலட்சுமியும் 30.07.1982 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் 417 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதிமூலம் மேற்குறித்த அதே உரித்து வரலாற்றைக் குறிப்பிட்டு திருச் செந்தூர் மகள் இராஜினிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். வட்டுக்கோட்டை மேற்கு திருச்செந்தூர் மகள் கமலாம்பாள், திருச்செந்தூர் மகள் இராஜினி இருவரும் 1983.05.16 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் முறையே 438, 489 ஆம் இலக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலமாக இராமசாமி குமாரசிங்கத்திற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன விபரம்: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை "அணிச்சிலடியும் பாதிரி திடலும்" நில.பர.0 குளி 03.46 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 2461/2016 ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு-1, துண்டு-2 எனச் சுட்டப்பட்டுள்ளது.

வடக்கு: பாதை (உறுதிப்படி இராமநாதனின் ஆதனம்)

கிழக்கு: ஜெயரட்ணசிங்கம் கமலாம்பாளின் உரிமைக்காரரின் ஆதனம்


தெற்கு: வடிகாலும், மின்சாரநிலைய வீதியும்

மேற்கு: ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை.

தற்போது இராமசாமி குமாரசிங்கம் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராமசாமி குமாரசிங்கம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-1564)





# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:49 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA/அமெரிக்கா<br>தொ.இ: B/8217 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்<br>தொ.இ: G/8233 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/8218 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 13 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:IT/அரசதொழில்<br>தொ.இ: G/8234 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 5<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BBM/அரசதொழில்<br>தொ.இ: B/8219 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/8238 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA/அரசதொழில்<br>தொ.இ: B/8220 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA/அரசதொழில்<br>தொ.இ: G/8242 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5484
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தேசிய அரசாங்கம் 2020 வரை தொடரும்

## ஐ.தே.க நேற்றுத் தீர்மானம்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையின் கீழ் தேசிய அரசாங்கத்தினை 2020 ஆம் ஆண்டுவரை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன், நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேர்தல் முடிவுகள் தேசிய அரசாங்கத்துக்கு வழங்கியுள்ள தகவலை அவதானத்தில் எடுத்துக் கொண்டு எதிர்வரும் நாட்களில் சில பல மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## மகிந்தவுடன் இணைகிறார் சுசில் -முதலாவது கட்சித்தாவல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினரும், தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் சேர்ந்து சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஏழு பேரும் மகிந்த ராஜபக்சவுடன் இணைவதற்கான பேச்சுக்களை நடத்திவருவதாக உயர்மட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் முதற்கட்டமாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இதுவரை வெளியாகிய தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணி பல்வேறு பிரதேச சபைகளை கைப்பற்றியுள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஜனாதிபதியை தொடர்பு கொண்ட சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் தங்களது அதிருப்தியை வெளியிட்டதாகவும் தெரிய வருகிறது. (இ)

## 15 ஆயிரம் பழக்கிராமங்களை ஸ்தாபிக்கும் திட்டம் முன்னெடுப்பு

### மூன்று கிராமங்கள் தெரிவு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் 15 ஆயிரம் பழக் கிராமங்களை ஸ்தாபிக்கும் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேசத்தில் 3 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களில் முதற்கட்டமாக சீதா, தோடை முதலான தாவரங்கள் பயிரிடப்படவுள்ளன.

கிராமவாசிகள் மத்தியில் தாவரக் கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2)

## மனிதவள சக்தியில் பெண்களின் பங்களிப்பு கடந்தாண்டில் அதிகம்


இலங்கையின் மனித வள சக்தியின் பெண்களின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 35.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கு அமைவாக பெண்களில் 31 இலட்சத்து 40 ஆயிரத்து 787 பேர் பணிகளில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் பெண்கள் தொழில்வாய்ப்பு 1.7 சதவீதத்திற்கும் 6 சத வீதத்திற்கும் இடையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நாட்டில் தயாரிப்பு மற்றும் சேவை ஆகிய துறைகளில் ஆண்களிலும் பார்க்க பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு கூடியுள்ளதாக திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (2)

## முஷரப் மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்குமாறு உயர்நீதிமன்று அதிரடி உத்தரவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷரப் மீதான ஊழல் குற்றச்சாட்டில் விசாரணை நடத்துமாறு தேசிய புலனாய்வு முகமைக்கு இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

பாகிஸ்தானில் 2001ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி பதவி வகித்தவர் பர்வேஸ் முஷரப்.

அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கிலும், பெனாசிர் பூட்டோவையும், பலுசிஸ்தான் மாகாண ஆளுநராக இருந்த அக்பர் புக்தியையும் கொல்ல சதி செய்த வழக்கிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இந்நிலையில் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டு இருந்தது. பின்னர் அவரது பெயர் 2016ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 18ஆம் திகதி வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டோர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெறப் போவதாக கூறிவிட்டு துபாய்க்கு சென்றார். அங்கு தான் இப்போது வசித்து வருகிறார்.

இந்த நிலையில், அவர் ஜனாதிபதி பதவி வகித்த போது ஊழல் செய்து, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக ஓய்வு பெற்ற துணை கேணல் இனாமுர் ரகீம் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் தேசிய புலனாய்வு முகமையில் புகார் செய்து முஷரப் மீதான ஊழல் குற்றச் சாட்டில் விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முஷரப், பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவுடன் சமர்ப்பித்த சொத்து பட்டியல் மூலம் அவர் வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்தது தெரிய வந்து உள்ளதாகவும் இனாமுர் ரகீம் தெரிவித்திருந்தார். ஆனால் அவரது புகார் மனுவை ஏற்று தேசிய புலனாய்வு முகமை விசாரணை நடத்த மறுத்து விட்டது.

அவர் இராணுவ தளபதியாகவும், ஜனாதிபதியாகவும் பதவி வகித்ததால், அவருக்கு விலக்கு உரிமை உள்ளதாகவும், அவர் தேசிய புலனாய்வு முகமை சட்டத்தின் கீழ் வரவில்லை எனவும் அது கூறிவிட்டது. ஆனால் வழக்குதாரர் இனாமுர் ரகீம் விடவில்லை.

அவர் இது தொடர்பாக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் ஒரு வழக்கு தொடுத்தார். அந்த வழக்கில் அவர் முஷரப் மீதான ஊழல் குற்றச்சாட்டின் மீது தேசிய புலனாய்வு முகமை விசாரிக்க மறுத்து விட்டதைக் கூறி, அதற்கான உத்தரவை நீதிமன்று பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வழக்கை இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு விசாரித்தது.

முஷரப் தரப்பில் அவரது சட்டத்தரணி அக்தர் ஷா தாக்கல் செய்த பதில் மனுவில், "இராணுவ அதிகாரி ஒருவரின் ஊழல் நடவடிக்கைகள்மீது விசாரணை நடத்துவது பற்றி தேசிய புலனாய்வு முகமை சட்டத்தில் ஏதும் கூறப்படவில்லை, எனவே முஷரப் மீதான புகாரை விசாரிக்க மறுத்து தேசிய புலனாய்வு முகமை திருப்பி அனுப்பியது சரிதான்" என கூறப்பட்டு இருந்தது.

ஆனால் இரு தரப்பு வாதத்தை கேட்ட இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம், முஷரப் மீதான ஊழல் புகாரின்மீது தேசிய புலனாய்வு முகமை விசாரணை நடத்துமாறு அதிரடியாக உத்தரவிட்டது.

அந்த உத்தரவில் கூறி இருக்கும் முக்கிய அம்சங்கள்,

ஓய்வு பெற்ற ஜெனரல் பர்வேஸ் முஷரப் மீது தேசிய புலனாய்வு முகமை சட்டம் 1999 இன் கீழ் விசாரணை நடத்தி தண்டிக்க முடியும். அதற்கு 2 முகாந்திரங்கள் உள்ளன.

முதலில், அவர் அரசியல் சாதன பதவியான ஜனாதிபதி பதவியில் இருந்துள்ளார். இரண்டாவது, அந்த சட்டத்தின் பிரிவு 5(எம்)-ன் கீழ் அவர் மீது விசாரணை நடத்த முடியும். ஏனெனில், அவர் பதவி விலகி, பாகிஸ்தான் படையில் இருந்து ஓய்வு பெற்று விட்டார்.

முஷரப் மீதான புகார் மீது விசாரணை நடத்துவதில், தேசிய புலனாய்வு முகமை, அந்த சட்டத்தை தவறாக புரிந்து கொண்டு மறுத்துள்ளது. அப்படி மறுத்தது சட்ட விரோதம். எனவே முஷரப் மீது விசாரணை நடத்த வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. (2)

# தனியாருக்கு சொந்தமான காணியில் தீ! பயன்தரும் மரங்கள் எரிந்து நாசம்

## மன்னாரில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

மன்னார் கீரி கிராமத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான் காணி ஒன்றில் நேற்று. முன்தினம் சனிக்கிழமை மாலை திடீரென ஏற்பட்ட தீ பரவல் காரணமாக குறித்த காணியில் காணப்பட்ட மரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளதாக அப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ள்னர்.

மன்னார் கீரி கிராமத்திற்கு அருகிலுள்ள கர்த்தர் கோவில் பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் காணியில் திடீர் என தீப்பரவல் ஏற்பட்டது.

இதன்போது குறித்த காணியில் காணப்பட்ட தென்னை,பனை மரங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

குறித்த தீயை கட்டுப்படுத்த மக்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக பிரதேச மக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியும் மன்னார் பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் குறித்த இரண்டு ஏக்கர் காணியில் தீ முழுமையாக பரவி குறித்த காணியில் காணப்பட்ட தென்னை,பனை மரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளதாக குறித்த பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். (2-281)

# 358வது நாளாகவும் உறவுகள் போராட்டம்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி கந்தசாமி ஆலயம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளை தேடி கடந்த வருடம் பெப்ரவரி 20 ஆம் திகதி கூடாரமமைத்து ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் இன்று 358 ஆவது நாளாக தொடர்கிறது. கடந்த காலத்தில் கடத்தப்பட்டு இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தம்மிடம் ஒப்ப டைக்குமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தமது பிள்ளைகளுக்கு முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென உறவுகள் தெரிவிக்கின்றனர். (2-281)

# காட்டு யானைகள் தொல்லை; பயன்தரும் மரங்கள் தொடர்ந்தும் அழிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் காட்டு யானைகளின் தாக்கத்திலிருந்து பொதுமக்களையும் விவசாயச் செய்கைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மேழிவனம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, பழம்பாசி போன்ற பகுதிகளிலும் மற்றும் உடையார்கட்டு, முத்து ஐயன்கட்டு ஆகிய பகுதிகளிலும் காட்டுயானைகளின் தொல்லை தொடர்ந்தும் காணப்படு கின்றது.

இவ்வாறு காட்டுயானைகளின் தொல்லையால் இந்தப்பகுதிகளில் வாழ்கின்ற விவசாய மக்களினுடைய பெருமளவான பயிர்ச் செய்கைகள் காட்டுயானைகளால் அழிவுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை வரட்சி காலங்களிலும் பயிர்ச் செய்கை தவிர்ந்த காலங்களிலும் காட்டுயானைகள் ஊர்மனைகளுக்குள் புகுந்து பயன்தரும் மரங்களையும் வீடுகளையும் சேதப்படுத்தி வருகின்றது.

கடந்த ஏழு ஆண்டுகளாக இவ்வாறான காட்டு யானைகளின் தொல்லை தொடர்பில் பாரளுமன்ற உறுப் பினர்கள்,உயரதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது இன்று வரை ஆக்கபூர்வ மான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள விவசாய அமைப்புக்கள் 'இவ்வாறான காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தி உயிர் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதுடன் தொடர்ந்து வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளும் விவசாய செய்கைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேற்படி அமைப்புக்கள் கோரி க்கை விடுத்துள்ளன. (2-315)

# சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபட்டு வாழமுடியாத நிலையில் முல்லை.மீனவர்கள்

## சமாசத் தலைவர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வீட்டுமுற்றத்தில் கடல் இருக்கின்ற போதும், எமது தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்து வாழ முடியாதிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் ரி.அன்ரனி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களில் அதிகளவானோர் கடற்றொழிலையே வாழ்வாதாரத்தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அதாவது நல்லதண்ணீர்த்தொடுவாய் வரைக்கும் பேப்பாறைப்பிட்டி வரைக்குமான 73 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதிகளில் மீன்பிடித்தொழிலை அன்றாட வாழ்வாதாரத் தொழிலாக முன்னெடுத்து வருகின்றனர்.

சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாக கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இக்கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத சூழல் தொடர்ந்து உருவாகியிருப்பதனால் மீனவர்கள் வேறு தொழில்களை நாடி கூலிவேலைகளுக்கும் அரபு நாடுகளுக்கும் செல்லுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களினுடைய சமாசத்தலைவர் ரி.அன்ரனி கருத்துத் தெரிவிக்கும் போது, எமது மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதாவது, 1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட கடுமையான யுத்தம் கடல் வலயப் பாதுகாப்புத்தடைச் சட்டம் போன்றவற்றால் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டதுடன், கடற்றொழிலுக்குச்சென்ற பல கடற்றொழிலாளர்கள் பலர் காணாமல் போயிருந்தனர். பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

2000ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஏற்பட்ட ஓர் இடைவெளியில் எமது தொழிலாளர்கள் தமது தொழில்களை மேற்கொண்டு வந்தனர்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை காரணமாக கரையோர வாழ் கடற்றொழிலாளர்கள் தொழில் உபகரணங்களையும் உறவுகளையும் சொத்துக்களையும் இழந்தனர்.

இதன் பின்னர் 2009ஆம் ஆண்டு வரை நீடித்த கடுமையான போரினால் முற்று முழுதாக எமது தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.மீள்குடியேற்றத்தின் பின்னர் தமது தொழில்களை ஆரம்பித்த தொழிலாளர்கள் பாரிய முதலீடுகளை செய்யும் கடன்களைப் பெற்றும் தொழில்களைத் தொடங்கினார். ஆனால் ஏழு ஆண்டுகளில் அவர்கள் வாழ்வில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோதும், எதுவித முற்னேற்றமும் இல்லை.

இதனால் எமது மாவட்ட மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாதுள்ளதுடன், கடற்றொழில் உபகரணங்களைப் பெற்ற கடன்களை அடைப்பதற்காகவும் வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்காகவும் கூலிவேலைகளுக்காக வேறு இடங்களுக்கும் அரபு நாடுகளுக்கும் செல்கின்றனர் எனத் தெரிவித்தார். (2-315)




# கட்டாக்காலி கால்நடைகளினால் உடைமை சேதம்; உயிரிழப்பு அதிகம்


(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இரவு வேளையில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடைகளை வளர்ப்போர் உரிய கவனம் எடுப்பதில்லை எனவும் அவை வீதியெங்கும் திரிவதால் பொதுமக்கள், சாரதிகள் போக்குவரத்தின் போது பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு கால்நடைகளினால் பல்வேறு விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் வீணாக உயிர்ச்சேதங்கள், உடைமை சேதங்கள் ஏற்படுவதோடு கால்நடைகள் பலவும் இறந்துள்ளன.

எனவே கால்நடை களை உரியவர்கள் உரிய வகையில் பராமரிக்க வேண்டுமென தெரிவிப்பதோடு இதனை செய்ய தவறுபவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)



வவுனியா மாவட்ட செயலகமும், வவுனியா நகர பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பள்ளு நாட்டிய நாடகம் அண்மையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

# உணவே மருந்து மருந்தே உணவு ஆரோக்கிய வாழ்வை போதித்த சித்தர்கள்



நோய்வரின் நோய் நாடி அது தணிக்கும் வாய் நாடிச் செய்யும் சித்தமருத்துவமானது மனிதர்களின் மரணமில்லாப் பெருவாழ்வை வலியுறுத்துவதோடு மக்களுக்கான நல்வாழ்வை வாழ உணவே மருந்து மருந்தே உணவு என்னும் கோட்பாட்டிற்கு இணங்க அறிவியலோடு இயைந்து இயற்கையுடன் இணைந்த ஆரோக்கிய வாழ்வை நோக்கியதாகும்.

சித்தமருத்துவத்தின் அடிப்படைகள் நவீன அறிவியலோடு ஒத்த அமைப்பில் உருவானவை. ஆழ்ந்து நோக்கும் போது அறிவியலின் அளவை இயலிலின்று எந்தவிதத்திலும் மாறுபடாதவை. உலக மருத்துவ முறைகளுக்கெல்லாம் மூல மருத்துவமாக மரபுவழி மருத்துவத்திற்கு மணிமகுடமாகவும் நாகரிகம், பண்பாடு, கலை, ஞானம் போன்றவற்றில் வேரூன்றி தமிழர்களின் உணர்வில் தழைத்தோங்கி உடல், உள நலத்திற்கு இயற்கையோடு இணைந்த எளிய வாழ்வே மக்களினத்திற்கு சாலச்சிறந்ததென கண்டறிந்து அதற்கேற்ற ஒரு மருத்துவ முறையாக சித்தர்களால் வழங்கப்பட்ட மருத்துவம் ஆகும்.

முதன்முறையாக சித்த மருத்துவ அலகால் சர்வ தேச மாநாடு மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டு நம் மருத்துவ வளர்ச்சிக்கு வலுவூட்டுவது உலகளாவிய ரீதியில் நல்லதோர் அங்கீகாரத்தை வழங்கும். அந்த வகையில் இம்மாநாடானது Ministry of Ayush, New Dehli, India உடன் இணைந்து எமது வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், கைதடி சித்தமருத்துவ போதனா வைத்திய சாலை என்பனவும் ஒன்றிணைந்து சர்வ தேச மாநாடு, பயிற்சி பட்டறை, கண்காட்சி என்பவற்றை நடத்தவுள்ளன.

அத்துடன் இச் சர்வ தேச மாநாடு மற்றும் கண்காட்சிக்கு இந்தியாவிலிருந்து வருகை தரும் வளவாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்பதன் மூலம் இந்நிகழ்வானது எமது அருகில் நடத்தப்பட இருப்பது நம் அனைவருக்கும் மிக பயனுள்ளதாக அமையும் என்றால் மிகையாகாது.

இச் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியானது மாசி மாதம் 23 - 27 ஆம் திகதி வரை அரசாங்க சித்த மருத்துவ வைத்தியர்கள், சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள், இலங்கை மற்றும் இந்தியாவின் இயற்கை சித்தமருத்துவ உற்பத்தி நிலையங்கள் (Herbal Pharmacueticals), வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் ஆகியோரின் பங்களிப்புடன் நடத்தப்படவுள்ளது. இக் கண்காட்சியின் செயல்முறை ரீதியான விளக்கங்களை பொது மக்கள் முற்றுமுழுதாக பெறக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்படவுள்ளது.

இக் கண்காட்சியானது எமது சித்தமருத்துவ மாணவர் ஒன்றியத்தால் முழுமையாக பொறுப்பேற்றகப்பட்டு எமது மாணவர்கள் 5 பெரும் துறை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இக் கண்காட்சியை மேற் கொள்ளவுள்ளனர்.

மேற்கூறப் பட்டதன் படி குணபாடம், மூலதத்துவம், நோய் நாடல், விரண சிகிச்சை, குழந்தை மற்றும் மகளிர் மருத்துவம் ஆகிய துறைப் பிரிவுகளில் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில் குணபாடப்பிரிவில் மாணவர்களால் மூலிகைத் தாவரங்களை இனங்காணும் முறைகளும் அம் மூலிகைத் தாவரங்களை கொண்டு வீட்டிலேயே இலகுவான முறையில் கைமருந்துவத்தை மேற் கொள்ளக் கூடியவாறான செயற்பாட்டு விளக்கங்களும், போசணைப் பெறுமான அடிப்படையில் உடல் நலத்திற்கு தேவையான உணவு முறைகள் பற்றிய அறிவுறுத்தல்களும் வழங்கப் படவுள்ளன.

மூலதத்துவப்பரிவில் சித்த மருத்துவத்தின் 96 அடிப்படைத் தத்துவங்கள், பஞ்சபூதக் கொள்கைகள், உடல் ஆதாரங்கள் பற்றிய விளக்கங்கள், சித்தர்களின் அட்டமா சித்திகள், காயகற்ப முறைகள் யோகக் கலைகள் பற்றிய விளக்கங்களும் வழங்கப்ப டவுள்ளன. மேலும் நோய் நாடல் பிரிவில் நாடிப் பரீட்சை, தொக்கணம், வர்மம், மற்றும் நசியம் போன்ற பல முறைகள் பற்றிய சுவரொட்டி விளக்கங்களும் கண்காட்சிப் படுத்தப்படவுள்ளன.

அதுமட்டுமன்றி விரண சிகிச்சைப் பிரிவில் சுட்டிகை, அட்டை விடல், நொம்புகட்டல், கட்டு, பற்று, வர்நிதி (காரநூல் பிரயோகம்) என்பு பொருத்துதல் , பீச்சு உள்ளிட்ட சிகிச்சைகள் பற்றி விளக்கங்களும் எமது மாணவர்களால் வழங்கப்படவுள்ளன.

குழந்தை மற்றும் மருத்துவத்தில் குழந்தைகளின் வளர்ச்சிப்பருவம், உணவுப் பழக்க வழக்கம், பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வுகளும், குழந்தைப் பருவத்தில் தோன்றும் பொதுவான நோய்களும் அவற்றுக்கான பராமரிப்பு முறைகளும் பெண்களின் சிறப்பான உணவுப்பழக்க வழக்கங்களும் பராமரிப்பு முறைகளும், குழந்தைப் பேறின்மைக்கான காரணங்களும் இன்றைய உலகில் அதிகரித்து வரும் பெண்களுக்கு ஏற்படும் புற்று நோய் பற்றி சாதாரண அறிவும், சுய பரிசோதனை மூலம் கண்டுபிடிப்பதற்கு ஏற்ப எளிய வழிமுறைகளும், கர்ப்பகாலம், பிரசவத்தின் பின்னரான நலம் தொடர்பான சந்தேகத்திற்குரிய விளக்கங்களும் தீர்வுகளை வழங்குவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் தொற்றா நோய்கள், ஆட்கொல்லி நோய்களாக விரட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறவும், வராது தடுக்கவும், வந்த பின்னர் குணப்படுத்துவதற்கான சிகிச்சைகளும் அறிவுரைகளும் வழங்கப்படவுள்ளன.

நவீன முறைகளில் தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகள் அதற்குரிய வளவாளர்களால் வழங்கப்படுவதோடு அதனைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகளும் செய்யப்படவுள்ளன. முக்கியமான நோய்களாக நீரிழிவு, உயர் குருதியமுக்கம், அதிக உடல் நிறை, மன அழுத்தம், அதிக கொழுப்பு என்பவற்றை தவிர்ப்பதற்கான மருந்துகளும் யோகாசனம், தியானம், மந்திர உச்சாடனம் என்பன பற்றிய விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இக் கண்காட்சியில் 500 இற்கும் மேற்பட்ட மூலிகைகள் இனங்காண்பதற்குரிய பல வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இவற்றின் பரம்பலை வீடு மற்றும் பாடசாலைத் தோட்டங்களிலும் விஸ்தரிக்கும் நோக்கில் மூலிகை நாற்றுக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

அதுமட்டுமன்றி சித்த மருத்துவ மாணவர்களாகிய எம்மால் உணவுப் பழக்கவழக்க முறைகள், நாட்பட்ட தோல் நோய் (காளாஞ்சுப் படை), மூலரோகம், வாத நோய்கள், மூட்டு வலிகளுக்கான சிகிச்சைகள் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கலாசார ரீதியான வாழ்வியல் முறைகளும் உணவுகளும் அவற்றுக்கான விஞ்ஞான முறையிலான . விளக்கங்களும் வழங்கப்படும்.

எனவே பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், விவசாயிகள் இவ் ஐந்து நாட்களில் சித்த மருத்துவம் சார்ந்த அனைத்து விளக்கங்களையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரையும் இக் கண்காட்சியை கண்டு களித்து பயன் பெறுமாறு சித்தமருத்துவ மாண வர்கள் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆகவே உங்கள் அனைவரது பூரண ஆதரவை நல்கி எமது கண்காட்சியை சிறப்புற நிகழ்த்த அனைவரையும் . அழைக்கின்றோம்.

த.கனிசாந்த்
தலைவர்,
சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்
சித்த மருத்துவ அலகு
யாழ்.பல்கலைக்கழகம்.

## 13 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து யாழ். உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 13 மாணவர்களுக்கு அண்மையில், பாதணிகள் மற்றும் புத்தகப்பைகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். (இ-9)

## "ஐஸ்" போதைப் பொருளுடன் இந்தியப் பிரஜைகள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் "ஐஸ்" என அழைக்கப்படும் போதைப்பொருள் வகை பொன்றை இலங்கைக்கு கொண்டு வந்த இந்திய பிரஜைகள் இருவரை விமான நிலைய சுங்கத்தினர் கைது செய்துள்ளனர்.

இந்நபர் நேற்று முன் தினம் அதிகாலை தனது பயணப்பையில் சுமார் 514 கிராம் போதைப் பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்து கொண்டு வந்த வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, விமான நிலைய சுங்கத்தினர் மேற்கொண்ட சோதனையில் சிக்கியுள்ளனர்.

இதன் பெறுமதி சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகம் என தெரிய வந்துள்ளது.

மலேசியாவில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை 4.55 மணியளவில் கட்டுநாயக்க வந்த விமானத்தில் குறித்த சந்தேக நபர்கள் வருகை தந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கத்தினர் ஆரம்பித்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ)

# மகிந்தவின் அடுத்த திட்டம் என்ன?

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் பரபரப்பிற்கு இணையானதாக தற்போது உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் சூடுபிடித்துள்ளன. இந்த நிலையில் அடுத்த கட்ட அரசியல் நகர்வு எவ்வாறு அமையப் போகின்றது என்ற எதிர்பார்ப்புகள் நாட்டு மக்களிடையே அதிகரித்துள்ளன.

காரணம் 2015 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் மகிந்த இழந்த தன் அதிகாரத்தினை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

குறிப்பாக நல்லாட்சி அரசாங்கத்தினை மாற்றியமைப்பதன் பிரதான ஆயுதமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பயன்படுத்திக்கொள்ள மகிந்த தரப்பு திட்டமிட்டு அதற்கான காய்நகர்தல்களை படிப்படியாக செய்து வந்தது.


நாட்டின் பல பகுதிகளில் பொதுஜன பெரமுன வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு "தமது வெற்றிக்கு பங்களிப்பு செய்த மக்களுக்கு நன்றிகள்" என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் ராஜபக்ஷவினருக்கு சாதகமாக அமையும் எனின் அடுத்த கட்ட தென்னிலங்கை அரசியலில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படக்கூடும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை கணக்கிடப்பட்ட சில பிரதேச சபைத் தேர்தல் வாக்கு கணக்கெடுப்பு மீண்டும் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியினர் கோரிக்கை விடுத்த காரணத்தினாலேயே தேர்தல் முடிவுகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எவ்வாறெனினும் இந்தத் தேர்தல் பாரிய அரசியல் மாற்றத்தினை ஏற்படுத்தாவிடினும், கட்சி உட்பூசல்களை அதிகரிக்கும் என்றே தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் முடிவுகளின்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பின் பொதுஜன பெரமுன நாடு முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தும் எனின் மக்கள் மத்தியில் இன்றும் மகிந்த ஆட்சியின் தாக்கம் உளது என்ற தோற்றமே ஏற்படக்கூடும். அதனைத் தொடர்ந்து நல்லாட்சி அரசுக்கு மகிந்த தரப்பு பாரிய நெருக்கடிகளைக் கொடுக்கும் சாத்தியக்கூறுகள் ஏற்படும் என்பதே உண்மை.



குறிப்பாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மகிந்த தரப்பு ஆட்சிக்கு எதிராக பிரதான கருவியாக நோக்கினாலும், விமர்சனங்களை முன்வைத்தாலும் கூட உள்ளூராட்சி சபை அதிகாரத்தினைக் கொண்டு ஆளும் கட்சியை எதிர்ப்பது அல்லது ஆட்சியை மாற்றியமைத்துவிட முடியும் என்று கூறப்படுவதில் உண்மைத்தன்மை இல்லை என்றே கூறப்படுகின்றது.

ஆனாலும் மகிந்த அணியினர் இந்தத் தேர்தல் மூலம் மக்கள் மத்தியில் தனக்கு உள்ள ஆதரவினை எடுத்துக்காட்டவே ஆயத்தமாகின்றனர் எனலாம். காரணம் எதிர்கால தேர்தல் முடிவுகளை தீர்மானித்து, இழந்த அதிகாரத்தினை மகிந்த அணி மீண்டும் கைப்பற்றும் அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்கான பாதையாகவே இந்தத் தேர்தல் அமையுமே தவிர அதிகாரத்தினை மாற்றியமைக்கும் தேர்தல் இதுவல்ல என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றிக்கு இடையிலான பனிப்போர் வலுப்பெறும் என தென்னிலங்கை அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்தே இப்போதைக்கு இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நகர்வடைந்து செல்கின்றது எனவும், முன்னரை விடவும் இனிவரும் காலங்களில் மகிந்த ஆட்சிக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரிக்கக்கூடும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மகிந்தவின் ஊடக ஒருங்கிணைப்பாளரின் வீட்டுக்குச் சென்ற FCID அதிகாரிகள்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக ஒருங்கிணைப்பாளர் ரொஹான் வெலிவிட்டவின் வீட்டுக்கு நேற்றுப் பிற்பகல் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீ. எஸ்.என். அலைவரிசையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பான வாக்கு மூலத்தை வழங்குவதற்காக நாளை 13ஆம் திகதி நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு வருகைத் தருமாறு FCID அதிகாரிகள் ரொஹான் வெலிவிட்டவிடம் தெரிவித்துள்ளனர்.

ரொஹான் வெலிவிட்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்துக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவு அதிகாரிகள் ஹோமாகமையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளமை தொடர் பில் தனக்கு தெரிய வந்ததையடுத்து, உடனடியாக தனது வீட்டுக்கு தான் சென்றதாகவும் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார். (இ)

## மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது!

### கோத்தபாய சுட்டிக்காட்டு

(கொழும்பு)



மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்பதை இம்முறை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் வலைத்தளத்தில அவர் பதிவிட்டுள்ளார்.

"எமது தாய்நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்புடன், சகல தடைகளையும் தகர்த்தெறிந்து இந்த வெற்றியைப் பெறுவதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து இலங்கையர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்பதை இந்த வெற்றி நிரூபித்துள்ளதாகவும்" அவர் பதிவிட்டுள்ளார். (இ)

## பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் பண்ணிசை மற்றும் திருக்குறள் மனனப் போட்டிகள் நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரை இப்போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்பாத மாணவர்கள் போட்டி நடைபெறும் தினத்தன்று தமது கல்லூரி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நேரில் சமுகமளித்து போட்டியில் பங்குபற்ற முடியும் என சபையின் செயலாளர் வை. இரகுநாதமுதலியார் அறிவித்துள்ளார். (இ-9)

## மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கை குறித்து பேச்சுவார்த்தை

### சர்வகட்சி கூட்டத்திற்கு அமைச்சர் அழைப்பு

(கொழும்பு)



மாகாண சபை தேசிய எல்லை நிர்ணய குழு தயாரித்த அறிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சர்வகட்சி மகாநாடு நடத்தப்படவுள்ளது.

இதற்காக கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகள் 'மற்றும் சிறிய அரசியல் கட்சிகளைப் பங்கு கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய எல்லை நிர்ணய குழுவின் ஆரம்பப் பேச்சுவார்த்தை நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும். இதில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## இலங்கையிலிருந்து த்ரமான மிளகாயை ஏற்றுமதி செய்ய தீர்மானம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் தரத்தில் சிறந்த மிளகாயை மாத்திரம் ஏற்றுமதி செய்யவுள்ளதாக கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கையின் உற்பத்திகளுக்கு இருக்கும் நன்மதிப்பை தொடர்ந்து பேணுவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

2016ஆம் ஆண்டு மிளகாய் ஏற்றுமதியின் மூலம் ஆயிரத்து 80 கோடி ரூபாவிற்கு மேலான வருமானம் கிடைத்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)



# உள்ளூராட்சி மன்ற

## வடக்கு மாகாணம்

| போட்டியிட்ட கட்சிகள் | மொத்த ஆசனங்கள் |
|---|---|
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 86 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி (த.தே.கூ) | 274 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) | 92 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி (த.வி.கூ) | 38 |
| ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) | 91 |
| மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) | 03 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீல.சு.க.) | 71 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மகிந்த அணி) | 26 |
| தமிழ் சமூக ஜனநாயக கட்சி (த.ச.ஜ.க) | 03 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (ஸ்ரீல.மு.கா) | 09 |

உள்ளூராட்சி சபைத் தேர்தல்- 2018 முடிவுகள் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மாலை வரை வெளியிடப்பட்டன.

அந்த வகையில் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் பெற்ற ஆசனங்கள் இங்கு தரப்பட்டுள்ளது.

| யாழ்.மாநகர சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 16 |
| அ.இ.த.கா | 13 |
| ஈ.பி.டி.பி | 10 |
| ஐ.தே.க | 3 |
| ஸ்ரீல.சு.க | 2 |
| த.வி.கூ | 1 |

| வல்வெட்டித்துறை நகர சபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 2 |
| இ.த.அ.க | 7 |
| ஈ.பி.டி.பி | 2 |
| த.வி.கூ | 1 |
| ஸ்ரீல.சு.க | 1 |
| சுயேட்சை | 4 |

| பருத்தித்துறை நகரசபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 6 |
| இ.த.அ.க | 5 |
| ஈ.பி.டி.பி | 2 |
| த.வி.கூ | 1 |
| சுயேட்சை | 1 |

| சாவகச்சேரி நகர சபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 6 |
| இ.த.அ.க | 5 |
| ஈ.பி.டி.பி | 3 |
| ஐ.தே.க | 1 |
| த.ச.ஜ.க | 1 |
| ஸ்ரீல.சு.க | 2 |

| காரைநகர் பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 3 |
| ஐ.தே.க | 2 |
| ஈ.பி.டி.பி | 2 |
| சுயேட்சை | 3 |
| அ.இ.த.கா | 1 |

| ஊர்காவற்றுறை பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| ஈ.பி.டி.பி | 7 |
| இ.த.அ.க | 5 |
| அ.இ.த.கா | 1 |

| நெடுந்தீவு பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| ஈ.பி.டி.பி | 6 |
| இ.த.அ.க | 4 |
| சுயேட்சை | 2 |
| ஐ.தே.க | 1 |

| வேலணை பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 8 |
| ஈ.பி.டி.பி | 6 |
| மகிந்த அணி | 2 |
| அ.இ.த.கா | 1 |
| ஐ.தே.க | 1 |
| த.வி.கூ | 1 |
| ஸ்ரீல.சு.க | 1 |

| வலிகாமம் மேற்கு பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 6 |
| இ.த.அ.க | 9 |
| ஈ.பி.டி.பி | 4 |
| ஐ.தே.க | 3 |
| ஸ்ரீல.சு.க | 1 |
| மகிந்த அணி | 2 |

| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 17 |
| ஈ.பி.டி.பி | 8 |
| அ.இ.த.கா | 6 |
| ஸ்ரீல.சு.க | 4 |
| ஐ.தே.க | 2 |
| த.வி.கூ | 2 |

| வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 12 |
| ஈ.பி.டி.பி | 7 |
| அ.இ.த.கா | 4 |
| த.வி.கூ | 2 |
| ஐ.தே.க | 2 |
| ஸ்ரீல.சு.க | 1 |

| வலிகாமம் தெற்கு பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 11 |
| அ.இ.த.கா | 6 |
| ஐ.தே.க | 3 |
| ஈ.பி.டி.பி | 4 |
| ஸ்ரீல.சு.க | 4 |
| த.வி.கூ | 2 |

| வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 6 |
| இ.த.அ.க | 13 |
| ஈ.பி.டி.பி | 6 |
| ஐ.தே.க | 1 |
| த.வி.கூ | 3 |
| ஸ்ரீல.சு.க | 3 |
| சுயேட்சை | 4 |

| வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை |
|---|
| இ.த.அ.க |
| அ.இ.த.கா |
| ஸ்ரீல.சு.க |
| த.வி.கூ |
| ஈ.பி.டி.பி |
| ஐ.தே.க |

| சாவகச்சேரி பிரதேச சபை |
|---|
| இ.த.அ.க |
| அ.இ.த.கா |
| ஈ.பி.டி.பி |
| ஸ்ரீல.சு.க |
| த.வி.கூ |
| ஐ.தே.க |
| த.ச.ஜ.க |

| நல்லூர் பிரதேசசபை | ஆசன |
|---|---|
| அ.இ.த.கா | |
| இ.த.அ.க | |
| ஈ.பி.டி.பி | |
| ஐ.தே.க | |
| த.வி.கூ | |
| ஸ்ரீல.சு.க | |
| சுயேட்சை | |

## கிளிநொச்சி

| பச்சிலைப்பள்ளி பிரதேசசபை |
|---|
| இ.த.அ.க |
| சுயேட்சை |
| அ.இ.த.கா |
| ஈ.பி.டி.பி |
| ஸ்ரீல.சு.க |

| கரைச்சி பிரதேச சபை |
|---|
| இ.த.அ.க |
| சுயேட்சை |
| அ.இ.த.கா |
| ஸ்ரீல.சு.க |
| ஐ.தே.க |
| ஈ.பி.டி.பி |
| த.வி.கூ |

| பூநகரி பிரதேச சபை |
|---|
| இ.த.அ.க |
| சுயேட்சை |
| ஐ.தே.க |
| ஸ்ரீல.சு.க |
| ஈ.பி.டி.பி |

# ...றத் தேர்தல் -2018

| ...பை | ஆசனங்கள் |
|---|---|
| | 9 |
| | 7 |
| | 7 |
| | 3 |
| | 3 |
| | 2 |

| | ஆசனங்கள் |
|---|---|
| | 13 |
| | 6 |
| | 4 |
| | 3 |
| | 2 |
| | 2 |
| | 1 |

| | ஆசனங்கள் |
|---|---|
| | 5 |
| | 6 |
| | 4 |
| | 1 |
| | 1 |
| | 1 |
| | 2 |

## ...சி

| | ஆசனங்கள் |
|---|---|
| | 6 |
| | 4 |
| | 1 |
| | 1 |
| | 1 |

| | ஆசனங்கள் |
|---|---|
| | 17 |
| | 11 |
| | 2 |
| | 2 |
| | 1 |
| | 1 |
| | 1 |

| | ஆசனங்கள் |
|---|---|
| | 11 |
| | 4 |
| | 2 |
| | 2 |
| | 1 |

## மன்னார்

| மன்னார் நகர சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 7 |
| ஈ.பி.டி.பி | 1 |
| ஐ.தே.க | 4 |
| த.வி.கூ | 2 |
| ஸ்ரீல.சு.க | 1 |
| மகிந்த அணி | 1 |

| மன்னார் பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 7 |
| ஈ.பி.டி.பி | 1 |
| ஐ.தே.க | 7 |
| த.வி.கூ | 1 |
| ஸ்ரீல.சு.க | 2 |
| மகிந்த அணி | 1 |
| ஸ்ரீல.மு.கா | 2 |

| நானாட்டான் பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 7 |
| ஐ.தே.க | 5 |
| த.வி.கூ | 3 |
| ஸ்ரீல.சு.க | 1 |

| முசலி பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| ஐ.தே.க | 7 |
| ஸ்ரீல.மு.கா | 4 |
| இ.த.அ.க | 2 |
| ஸ்ரீல.சு.க | 1 |
| மகிந்த அணி | 1 |
| சுயேட்சை | 1 |

| மாந்தை மேற்கு பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 1 |
| இ.த.அ.க | 5 |
| ஐ.தே.க | 11 |
| த.வி.கூ | 2 |
| ஸ்ரீல.சு.க | 3 |
| ஸ்ரீல.மு.கா | 2 |
| சுயேட்சை | 1 |

## வவுனியா

| வவுனியா நகர சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.அ.க | 8 |
| ஸ்ரீல.சு.க | 3 |
| ஈ.பி.டி.பி | 3 |
| ஐ.தே.க | 3 |
| அ.இ.த.கா | 1 |
| மகிந்த அணி | 1 |

| வவுனியா வடக்கு பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 3 |
| இ.த.அ.க | 8 |
| ஐ.தே.சு.மு | 1 |
| ஐ.தே.க | 3 |
| ம.வி.மு | 1 |
| த.வி.கூ | 3 |
| ஸ்ரீல.சு.க | 7 |
| மகிந்த அணி | 5 |

| வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| ஸ்ரீல.சு.க | 4 |
| ஐ.தே.க | 4 |
| இ.த.அ.க | 5 |
| த.வி.கூ | 3 |
| ஸ்ரீல.மு.கா | 1 |
| அ.இ.த.கா | 1 |
| மகிந்த அணி | 1 |

| வவு.தெற்கு(சிங்களம்) பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| மகிந்த அணி | 8 |
| ஐ.தே.க | 4 |
| ஸ்ரீல.சு.க | 2 |
| ம.வி.மு | 1 |
| சுயேட்சை 1 | 1 |
| சுயேட்சை 2 | 1 |

| வவு.தெற்கு(தமிழ்) பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 1 |
| இ.த.அ.க | 11 |
| ஈ.பி.டி.பி | 2 |
| ஐ.தே.க | 4 |
| த.வி.கூ | 4 |
| ஸ்ரீல.சு.க. | 5 |
| சுயேட்சை | 1 |
| மகிந்த அணி | 2 |

## முல்லைத்தீவு

| மாந்தைகிழக்கு பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.க | 6 |
| ஐ.தே.க | 4 |
| ஸ்ரீல.சு.க | 2 |
| ஈ.பி.டி.பி | 1 |

| துணுக்காய் பிரதேச சபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.க | 6 |
| ஐ.தே.க | 3 |
| ஸ்ரீல.சு.க | 2 |
| த.வி.கூ | 1 |
| ஈ.பி.டி.பி | 1 |

| புதுக்குடியிருப்பு பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| அ.இ.த.கா | 1 |
| இ.த.க | 11 |
| ஈ.பி.டி.பி | 1 |
| ஐ.தே.க | 2 |
| ம.வி.மு. | 1 |
| ஸ்ரீல.சு.க. | 1 |
| சுயேட்சை | 4 |

| முகுடுவடபற்று பிரதேசசபை | ஆசனங்கள் |
|---|---|
| இ.த.க | 9 |
| ஐ.தே.க | 3 |
| சுயேட்சை | 3 |
| மகிந்த அணி | 2 |
| த.வி.கூ. | 2 |
| ஈ.பி.டி.பி | 2 |
| ஸ்ரீல.சு.க. | 1 |
| அ.இ.த.கா. | 1 |
| ஸ்ரீல.மு.கா | 1 |

# கடந்த வருடத்தில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகையாக ரூ.1356 கோடி

(கொழும்பு)

கடந்த பெரும்போக பயிர்ச்செய்கைக்கு உரமானியம் மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்காக 1365 கோடி ரூபாய் இழப்பீடு செலுத் தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

15 இலட்சம் விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. 2017ஆம் ஆண்டில் பெரும்போக உர மானியமாக 84இலட்சத்து 226 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை மூலம் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 520 கோடி ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

ஏதிர்காலத்திலும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உரமானியம் மற்றும் உற்பத்திகளுக்கான இழப் பீட்டுத் தொகை தொடர்ந்தும் வழங்கப்படும் என்று விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ஐக்கிய அரபு இராச்சியம்-இலங்கை 1.34 பில்லியன் வர்த்தக நடவடிக்கை




(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் தற்போது 1.34 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக டுபாய் மற்றும் கிழக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான கன்சல்ட் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

70 வது சுதந்திர தினத்தை முன்னிட்டும் டுபாய் மற்றும் கிழக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் கன்சல்ட் ஜெனரல் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடநிறைவை குறிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டநிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டுபாயிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இந்த வைபவம் நடைபெற்றது.

இதன்போது இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளையும் விபரித்தார். (இ)

# சிவனொளிபாத யாத்திரை செல்லும் பக்தர்களுக்காக விசேட ரயில் சேவை

(கொழும்பு)


சிவனொளிபாத யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் நலன்கருதி கொழும்பு கோட்டைக்கும் ஹற்றனுக்கும் இடையில் கடுகதி ரயில் சேவையொன்று ஈடுபடுத்தப்பட்டு இருப்பதாக ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

இந்த ரயில் இரவு 7.30க்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்டு அதிகாலை 12.45க்கு ஹற்றன் ரயில் நிலையத்தை சென்றடையும். பின்னர் குறித்த ரயில் காலை 8.30க்கு புறப்பட்டு பிற்பகல் 2.30க்கு கொழும்பு கோட்டையை வந்தடையும்.

ஆசனாங்களை ஒதுக்கக் கூடிய வசதிகளை கொண்ட இந்த ரயில் ராகம,கம்பஹா, வெயாங்கொட, விரிகம, பொல்காவெலை, ரம்புக்கனை, ஹரிஹலகோட்டே, கடுகன்னாவ, பெரதெனியா, கம்பளை, நாவலப்பிட்டிய, வட்டவளை ஆகிய ரயில் நிலையங்களில் மாத்திரம் நிறுத்தப்படும்.

மே மாதம் 1 ஆம் திகதி வரையில் இந்த ரயில் சேவை நடைபெறும். வாரத்தில் நடுப்பகுதியில் மாத்திரம் சில தினம் தவிர ஏனைய நாட்களில் ரயில் சேவை இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஈரான்-இலங்கை கூட்டு ஒத்துழைப்பை விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகள்



(கொழும்பு)

ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையில் பல்வேறு துறைகளில் அதாவது வர்த்தக மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தூதுக்குழு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

ஈரானின் எரிசக்தி துறையின் உயர்அதிகாரி ரசோல் தலைமையிலான குழுவினர் இலங்கை அதிகாரிகளுடன் இத்துறைகள் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி பின்னர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இதற்கான திட்டங்களை துரிதமாக விரிவுபடுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் சுகாதாரம் மற்றும் கலாசார துறைகளை பரிமாறிக் கொள்வது தொடர்பிலும் உடன்படிக்கை குறித்து இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதி வர்த்தக தொழிற்றுறை அமைச்சர் மற்றும் ஏற்றுமதி துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ)

## இன்று ஒரு தகவல்

### வெளியில் தெரியும் மனம்

சில வீடுகளில் சமையற்கட்டுக்கூட மிக அழகாக, மிகவும் சுத்தமாக இருக்கிறது. பரண்களில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. சில வீடுகளில் எல்லோரும் வந்து பார்க்கவும் அமரவும் அனுமதிக்கப்பட்ட வரவேற்பறை கூட மகா அசிங்கமாக இருக்கிறது.

ஒரே குப்பை சொல்லமுடியாத அளவிற்கு நூலாம்படை. தேவையற்ற காகிதங்கள், தெருவுக்குப் போக வேண்டிய பழைய சாமான்கள் எல்லாம் வீட்டிற்குள் இரைந்து கிடக்கின்றன.

சிலர் வீடுகளில் தோட்டம் அவ்வளவு அழகாக இருக்கின்றது! வேறு சிலர் வீடுகளிலோ தோட்டத்தில் கண்ட கண்ட செடிகள் வளர்ந்து மண்டிக் கிடக்கின்றன. இந்த முற்றிலும் மாறுபட்ட காட்சிகளை என்னவென்று எண்ணுகிறீர்கள்?

இவையெல்லாம் வெளியில் தெரியும் மனம்...

ஒருவருடைய மனநிலை எப்படிப்பட்டது? அவர் சுத்த உணர்வு உள்ளவரா? மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பது பற்றிக் கொஞ்சமேனும் கவலைப்படுவாரா? எதையும் உடனுக்குடன் முடிக்கும் ஆற்றல் உள்ளவரா? அல்லது தள்ளிப் போடும் சுபாவம் உள்ளவரா? என்பவற்றையெல்லாம் நீங்கள் யாரிடமேனும் விசாரிக்க வேண்டாம்.


இவர்களது மனம்-இதோ நீங்கள் மேலே கண்ட காட்சிகளிலேயே வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து விடுகிறது. உங்களுடைய அலுமாரி எப்படி இருக்கிறது? உங்கள் மேசை டிராயர் எப்படி இருக்கிறது? உங்களுடைய கைப்பை அல்லது பர்ஸ் அல்லது பக்கெட் எப்படி இருக்கிறது? இவை போதும் சுபாவங்களைச் சொல்ல!

சிலபேர் பக்கெட் முழுக்கக் கத்தை கத்தையாய் கண்ட கண்ட பேப்பர்களை வைத்திருப்பார்கள். இவர்கள் எந்த முடிவுக்கும் எளிதில் வரமாட்டார். சும்மா சொதப்பிக் கொண்டே இருப்பார்கள். இவற்றையெல்லாம் ஒழித்துக் கட்ட நேரமில்லை என்பார்கள் சிலர்!

நம்மை நாம் உணர , நம் அலுமாரிகளும் நம் மேசை டிராயர்களும் நம் இல்லமும் நம் கைப்பைகளும் பர்சுகளும் பக்கெட்டுக்களும் போதுமானவை. இவற்றையெல்லாம் மற்றவர்கள் கண்டு வியக்குமளவுக்கு மாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும் என்ன இந்த மனிதர் இப்படிப் போட்டு வைத்திருக்கிறாரோ என்று இளக்காரமாக எண்ணுவதை நிறுத்த முயற்சி எடுத்துக் கொள்ளலாமே!

**லேனா தமிழ்வாணன்**

# மறைந்திருக்கும் மர்மம்!



இரண்டாம் உலகப்போர்க் காலப்பகுதியில் திருகோணமலையின் மேற்குப் பக்கத்தில் பிரித்தானியர்களால் கட்டப்பட்ட எண்ணெய்க் கொள்கலன் தாங்கிப் பண்ணை (oil tank farm) ஒன்று காட்டில் மறைந்து காணப்படுகிறது.

ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக கிழக்கிந்திய பாதுகாப்பு நடவடிக்கை இடம்பெற்ற போது பிரித்தானியக் கடற்படை மற்றும் பிரித்தானிய விமானப் படையினர் தமக்குத் தேவையான எரிபொருட்களை நிரப்புவதற்காக திருகோணமலையில் அமைக்கப்பட்ட எண்ணெய் கொள்கலன் தாங்கியைப் பிரதானமாகப் பயன்படுத்தினர். சிங்கப்பூரை ஜப்பான் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர், இப்பிராந்தியத்திற்கான பிரதான எரிபொருள் நிரப்பு நிலையமாக திருகோணமலை விளங்கியது.

தற்போது இக்கொள்கலன் தாங்கியானது பழுதடைந்த நிலையில் காணப்பட்டாலும் கூட. இங்கு பெற்றோலிய சேமிப்பு வசதியைச் செய்வதற்கான தனது ஆர்வத்தை இந்தியா வெளியிட்டுள்ளது. இது தொடர்பான இந்திய-இலங்கை கூட்டு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான சமரசப் பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருவதாக பெற்றோலிய அமைச்சர் சந்திம வீரக்கொடி உறுதிப்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

2015இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட போது பெற்றோலிய கொள்கலன் தாங்கிகள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தியதாகவும் திருகோணமலையில் பாழடைந்த நிலையில் காணப்படும் பிரித்தானிய காலத்து எண்ணெய் தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்வதன் மூலம் திருகோணமலையானது பிராந்திய பெற்றோலிய மையமாகத் திகழ்வதற்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

திருகோணமலையில் பாழடைந்த நிலையில் காணப்படும் எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணையானது தற்போது காடுகளால் சூழப்பட்ட நிலையில் உள்ளது. 850 ஏக்கர் நிலப்பரப்பில் 101 கொள்கலன் தாங்கிகள் கட்டப்பட்டிருந்தன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு இந்தக் கொள்கலன் தாங்கிகள் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டன. அதன் பின்னர் இந்தப் பண்ணையைச் சூழவும் மரங்கள் வளர்ந்து இறுதியில் காட்டுப் பிரதேசமாக மாறியுள்ளது. இங்கு மலைப்பாம்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இந்த எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணைக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் 1924இல் மேற்கொள்ளப்பட்டு 1930இல் நிறைவடைந்தன. இக்கொள்கலன் தாங்கிகள் ஒரு அங்குல தடிப்பிலான உருக்கினால் வார்க்கப்பட்டுள்ளன. அத்துடன் திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள தாங்கிகள் ஒரு அடி தடிப்பில் மிகவும் பலமாகக் கட்டப்பட்டுள்ளன.

## திருகோணமலை எண்ணெய்க்குதம் இந்தியாவின் கைகளுக்குச் செல்கிறதா?



ஒவ்வொரு கொள்கலன் தாங்கியும் 12,000 தொன் எரிபொருளை சேமித்து வைக்கக் கூடியவாறு கட்டப்பட்டன. திருகோணமலையில் பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்துத் தாங்கிகளும் 1.2 மில்லியன் தொன் வரையான எரிபொருளை சேமித்து வைக்கக்கூடிய திறனைக் கொண்டிருந்தன.

தற்போது 15 தாங்கிகள் மட்டும் பயன்படுத்தத்தக்க நிலையில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தால் ஆளுகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் அனைத்து உரிமையும் ஐ.ஓ.சி நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளன. இக்கொள்கலன் தாங்கிகளைச் சென்று பார்வையிடுவதற்கு லங்கா



ஐ.ஓ.சி நிறுவனத்தின் அனுமதி தேவைப்படுகிறது.

இக்கொள்கலன் தாங்கிகளில் இரண்டு. விமான தாக்குதல்களால் அழிக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று திட்டமிட்ட ரீதியில் ஜப்பானிய விமானத்தால் அழிக்கப்பட்டது. மற்றையது 1960 இல்பிரித்தானியாவின்றோயல் விமானப்படை விமானம் தற்செயலாக இதில் மோதியதால் அழிவடைந்தது.

91ஆவது கொள்கலன் தாங்கியானது ஏப்ரல் 09, 1942 இல் திருகோணமலைத் துறைமுகம் மீது ஜப்பானியர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது அழிவுற்றது. அனைத்து கொள்கலன் தாங்கிகளிலும் மிகவும் தொலைவில் காணப்பட்ட 91ஆவது தாங்கியானது எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தது. இத்தாங்கியைச் சூழ மேலதிக பாதுகாப்புத் தடைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஜப்பானிய விமானப் படையைச் சேர்ந்த விமானிகளான சிகெனோரி வற்றனபே, ருயகோற்றோ மற்றும் சுற்றோமு றொசிறா (Shigenori Watanabe, Tuyagoto, and Sutomu Toshira) ஆகியோர் 91ஆவது தாங்கி மீது தமது விமானத்தை மோதி அழிவையேற்படுத்தினர். இத்தற்கொலைத் தாக்குதலால் ஏற்பட்ட தீச்சுவாலையானது ஏழு நாட்கள் வரை நீடித்தது. இறுதியில் உருக்கால் அமைக்கப்பட்ட இத்தாங்கி தீயால் உருகியது.

இந்த அழிவின் எச்சத்தை இன்றும் பார்க்க முடியும். இக்கொள்கலன் தாங்கியைச் சூழவிருந்த பிரதேசம் தீயால் எரிந்து சாம்பலாகியது. இதனையும் இன்றும் நேரில் பார்க்க முடியும். இதன் நிலப்பகுதி கறுப்பு நிற சாம்பல் மேடுகளாகக் காணப்படுகின்றன. இக்கொள்கலன் தாங்கியில் மோதிய விமானத்தின் இயந்திரப் பகுதியின் எச்சங்களை கொழும்பிலுள்ள விமானப் படையின் அருங்காட்சியகத்தில் பார்க்க முடியும்.

91ஆவது தாங்கியைச் சூழவுள்ள பிரதேசமானது எவ்வித மாற்றமில்லாது பழைய நிலையில் பாதுகாக்கப்படுகிறது. இக்கொள்கலன் தாங்கிக்குள் பாசி படர்ந்த நீர்க்குட்டை ஒன்றையும் காணமுடியும். இத்தாங்கிக்குள் உள்ளவற்றைப் பார்வையிடுவதற்காக அண்மையில் படிக்கட்டுக்கள் கட்டப்பட்டுள்ளன.

91ஆவது தாங்கிக்குச் செல்லும் வழியில் மேலும் பல தாங்கிகள் மறைந்து காணப்படுகின்றன.


இப்பகுதியானது மரங்கள் நிறைந்த வனாந்தரமாக மாறியுள்ளது. பழைய வீதிகள் மற்றும் நடைபாதைகள் தற்போது புதர்களால் சூழப்பட்டுள்ளன.

வழிமூலம் - Roar
ஆங்கிலத்தில் - MUDITHA KATUWAWALA
மொழியாக்கம் - நித்தியபாரதி

# தமிழ் மக்களின் தீர்ப்பை மதித்து ஏற்கின்றோம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு






(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களின் தீர்ப்பை மதித்து ஏற்றுக்கொள்கின்றோமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"தமிழ் பேசும் மக்களின் தீர்ப்பை மதித்து ஏற்றுக்கொள்கின்றோம். அவர்களோடு மேலும் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதற்கான வழிகளை நாம் நுட்பமாக ஆராய்கின்றோம். இந்த நாட்டின் அத்தனை குடிமக்களுக்காகவும் பேதமின்றி ஓய்வின்றிச் சேவையாற்றக் காத்திருக்கிறோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டு இருக்கும் வேளையில் நாமல் ராஜபக்ஷவின் இக்கருத்தானது எதிர்கால அரசியலில் தாக்கம் செலுத்தக் கூடும்.

இந்நிலையில் வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின் பிரகாரம் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பாலன இடங்களில் முன்னிலை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# எல்லாம் அரசியல் நாடகமா?

## மைத்திரி -மகிந்த மீள இணைய வாய்ப்பு

(கொழும்பு)

எனக்கு எதிராக கட்சி ஆரம்பிப்பவர்களின் இரகசியங்களை அம்பலப்படுத்தி வீதியில் அலைய விடுவேன் என 2016ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேடையில் பகிரங்கமாக எச்சரிக்கையினை விடுத்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பினரை குறிவைத்தே அவர் இவ்வாறானதோர் எச்சரிக்கையினை விடுத்திருந்தார் என்பது கடந்தகால அரசியல் நிலைப்பாட்டினை ஆராயும் போது தெளிவடையும்.

எனினும் தற்போது வரையிலும் மைத்திரி எந்தவொரு இரகசியத்தினையும் வெளிப்படுத்தவில்லை என்பதும் அவருக்கு எதிராக பொதுஜன பெரமுன சாதாரணமாக எழுந்து தற்போது விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இதன் காரணமாக இதுவரையில் நடைபெற்று வந்தது அரசியல் நாடகமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தற்போது வெளிவந்துள்ள முடிவுகளின்படி மகிந்த ஆதரவு தரப்பின் பொதுஜன பெரமுன ஏராளமான உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளது. எனினும் இறுதி கட்டத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனாலும் பொதுஜன பெரமுனவின் மக்கள் ஆதரவு நிரூபிக்கப்பட்டு விட்டது.

நிலைமை இவ்வாறு இருக்க பொதுஜன பெரமுன ஏற்கனவே வெற்றி பெற்று விட்டதாக அக்கட்சியின் ஆதரவாளர்களும் முக்கியஸ்தர்களும் கருத்துகளை வெளியிட்டு வருவதோடு, வெற்றிக் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் மகிந்தவின் தலைமையை இன்றும் மக்கள் விரும்புகின்றார்கள் என்ற எண்ணப்பாடு இயல்பாகவே உருவாகும் என்றாலும் ஊழல் அற்ற ஆட்சியினை அமைப்போம் என்று 2015ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த நல்லாட்சி இதுவரையிலும் ஊழல் தொடர்பாக எந்தவொரு காத்திரமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை என்பதே வெளிப்படை.

அதேபோன்று மகிந்தவின் தலைமையை பொது மக்கள் விரும்புகின்றார்களா என்பதனையும் தாண்டி,



நல்லாட்சி மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியே தற்போது வெளிப்பட்டுள்ளது எனலாம்.

நல்லாட்சி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை முழுவதுமாக நிறைவேற்றாமல் செயற்பட்டு வந்ததே தற்போது மக்களுக்கு ஆட்சி மீது வெறுப்பும், எதிர்ப்பக்கம் மகிந்த தரப்பிற்கு ஆதரவு வழங்கவும் முக்கிய காரணமாக அமைந்தது.

இந்த விடயத்தில் மகிந்த தரப்பிற்கு ஆதரவு அதிகரிக்க முக்கிய காரணம் அவர் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பினையும் தாண்டி மக்களின் மாற்றத்திற்கான எதிர் பார்ப்பு என்றே கூறப்படுகின்றது.

மக்கள் நல்லாட்சி அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கை குறைவடைந்தமையினால், அதற்கான மாற்றுத்தலைமை மகிந்த அணியிடம் மட்டுமே உள்ளது. காரணம் சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இணைந்த ஆட்சியாகவே நல்லாட்சி அமைந்துள்ளது.

ஏற்கனவே மாற்றத்தினை எதிர்பார்த்த மக்கள் நல்லாட்சியைத் தேர்வு செய்தனர், தற்போதும் அதே போன்ற மனநிலை ஏற்பட மக்கள் மகிந்த தரப்பிற்கே வாக்களிக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

எவ்வாயினும் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மூலம் மகிந்த தனது மக்கள் செல்வாக்கினை வெளிக்காட்டியுள்ளார் என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று என்றே அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயிலும் பொதுஜன பெரமுன கட்சிக்கு மகிந்தவை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர் இன்றும் சுதந்திரக்கட்சியின் உறுப்பினராகவே இருக்கின்றார் அக்கட்சியில் இருந்து அவர் நீக்கப்படவில்லை என்பதே உண்மை.

மேலும் மகிந்த ராஜபக்ஷ சுதந்திர கட்சியின் தலைமைப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என முக்கியஸ்தர்கள் சிலர் கோரிக்கை விடுத்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி எதிர்வரும் காலங்களில் ஏற்கனவே கூறப்பட்டதனைப்போல் மைத்திரி, மகிந்த அணிகள் மீண்டும் இணைந்துகொள்ளுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

காரணம் பொதுஜன பெரமுன கட்சியில் இணையாமலேயே மகிந்த அந்தக் கட்சியினை பலம் வாய்ந்ததாக உருவாக்கியுள்ளார். அடுத்து அவர் சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்வாராயின் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவு மைத்திரிக்கு அவசியமற்றதான அரசியல் நிலை உருவாகக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இதன் காரணமாகவே இதுவரையிலும் ஐக்கிய தேசிய கட்சிக்கும், சுதந்திர கட்சிக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமல் உள்ளதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

நிலைமை இவ்வாறு இருக்க அடுத்த பிரதமராக மகிந்தவை முன்னிறுத்த ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுவதோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக்கும் கோரிக்கைகளும் வலுப்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் மகிந்த, பொதுஜன பெரமுன, மைத்திரி சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அரசியல் நகர்வுகளை அவதானிக்கும் போது திட்டமிடப்பட்ட வகையில் சுதந்திரக்கட்சி தனித்து அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கே காய்நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகின்றது என்பது தற்போது அம்பலமாகி வருவதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அலோசியஸ், கசுன் பிணை மனுவுக்கு எதிராக பிறிதொரு மனுத்தாக்கல்

(கொழும்பு)

கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெர்பச்சுவல் ட்ரசறிஷ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் தம்மை பிணையில் விடுதலை செய்யுமாறுக் கோரி தாக்கல்செய்த மனுவை சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று முன்தினம் நிராகரித்து பிறிதொரு மனுவை தாக்கல் செய்துள்ளது.



சட்டமா அதிபர் சார்பில் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரிய ஜயசுந்தர மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹகம ஆகியோரே அர்ஜூன் அலோசியஸின் பிணை மனுவை எதிர்த்து பிறிதொரு மனுவைத்தாக்கல் செய்தனர்.

கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன உத்தரவிட்டார்.

இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ள மனுவை ஆராய்ந்ததன் பின்னர் உரிய தீர்ப்பை வழங்குவதாக நீதவான் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பிலான தனது முதலாவது B அறிக்கையை சி.ஐ.டியினர் கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்வைத்தனர்.

இதில் அர்ஜூன் அலோசியஸ்,கசுன் பலிசேன மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன்மஹேந்திரன் ஆகியோர் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர். (2)

## கொழும்பு மாநகரசபை வரலாற்றில் முதல் பெண் மேயர் தெரிவானார்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது.



இதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாநகரசபையில் போட்டியிட்ட ரோசி சேனாநாயக்க கொழும்பு மாநகர சபை வரலாற்றில் முதல் பெண் மேயராக தெரிவு செய்யப்படவுள்ளார்.

கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய தேசியக் கட்சி 131,353 வாக்குகளைப் பெற்றுக்கொண்டு 60 ஆசனங்களை பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 60,097 வாக்குகளைப் பெற்றுக் கொண்டு 28 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 3142 வாக்குகளையும் ஜே.வி.பி 14,234 வாக்குகளையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## பொதுத் தேர்தலுக்கு அழுத்தம் கொடுக்க மகிந்த அணி தயார்

(கொழும்பு)

வெளியான தேர்தல் முடிவுகளில் பொதுஜன பெரமுன முன்னிலை வகித்து வரும் நிலையில், முன்கூட்டிய பொதுத் தேர்தலுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் நம்பிக்கையை மகிந்த ராஜபக்ஷ வென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள பொதுஜன பெரமுன, அதன் பிரகாரம் முன்கூட்டிய பொதுத் தேர்தலுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தேர்தலின் மூலம் புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை பெற்றுக்கொள்ள எதிர் பார்ப்பதாகவும் பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு இரண்டு வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலை அறிவித்தார். அடுத்த பொதுத் தேர்தல் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு காணப்பட்டதை விட, தற்போதைய அரசாங்கத்திற்கான ஆதரவில் சரிவு நிலையே ஏற்பட்டுள்ளது. இதனை சாதகமாக பயன்படுத்தி முன்கூட்டிய தேர்தலுக்குச் செல்லும் முனைப்பில் மகிந்த அணி இறங்கியுள்ளது. (இ)


### மணமகள் தேவை

4/11/1978 இல் பிறந்த விவாகரத்து பெற்ற பொறுப்புகள் இல்லாத கம்பீரமான படித்த நல்ல பதவியிலுள்ள பிரான்ஸ் பிரஜைக்கு இலங்கைத் தமிழ் பெற்றோர் பொருத்தமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் கேட்டை, விருச்சிகம்

பாவம்:-38

தொடர்பு:-email:-

kumaramurugan@yahoo.co.in

அவசர தொலைபேசி:- 21.02.2018 வரை (94) 077 048 8243

02.04.2018 இற்குப் பின்: 0033 651 4130 42

(2709)

# 'நயினைச் சித்தர்' ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகளின் குருபூசை தினம் இன்று

"சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவர் அச்சோவே" என மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் சித்தர்கள் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். சித்தர்கள் மனிதன் வகுத்த வரம்புகளையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் கடந்தவர்கள். சித்தர்களுக்கு சாதி, சமய பேதம் எதுவும் இல்லை. அவர்கள் எல்லா உயிர்களிலும் இறைவனைத் தரிசித்தவர்கள். உலகம் உய்வடைய வேண்டும் என்று உயர்ந்தபிறவியானமானிடப் பிறவி பெற்றவர்கள். சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள், முனிவர்கள் தோன்றி வாழ்ந்த இடங்கள் புண்ணிய புனித பூமியாக மாற்றமடைந்திருப்பது வரலாற்று ரீதியாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமாகவும் அறிய முடிகின்றது.

நயினாதீவில் ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படுபவருமாகிய நயினை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியருக்கு ஆறாவது பிள்ளையாக 1986 இல் அவதாரம் செய்தார். இவர்சிறுவயதில் நயினாதீவு தில்லையம்பலம் பாடசாலையில் கல்வி பயின்றார் (தில்லையம்பலம் பாடசாலை காலப்போக்கில் இடம் மாற்றப்பட்டு நாகபூஷணி வித்தியாலயமாகதிகழ்கின்றது). இளவயதில் இருந்தே இவரிடம் ஆன்மீகத்தாகமும் கவிபாடும் திறனும் இருந்தன. கல்வியில் நாட்டம் குறைந்து ஆன்மீகத் தாகம் மிகுந்தவராக மாறி வந்த இவரை தமையனார் கொழும்பில் உள்ள தனது கடைக்கு உதவியாளராக அழைத்துச் சென்றார். இக் காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பெரியவர் ஒருவரிடம் இவருக்கு தொடர்பு ஏற்பட்டது. இப் பெரியாரே தன்னை ஆட்கொள்ள வந்த சற்குரு என்பதை அவர் அறியவில்லை.

இவர்கள் இருவருக்கும் இறுக்கமானதொரு ஆன்மீகத் தொடர்பு ஏற்படலாயிற்று. அந்தப் பெரியாரும் முத்துக்குமாரும் ஒருநாள் திடீரென கதிர்காமத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலைக்கு செல்லும் வழியில் ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது. அந்தத் தனிமையான சூழலிலும் நிசப்த இடத்தில் முத்துக்குமாருக்கு தீட்சையும் குரு உபதேசமும்கொடுக்கப்பட்டன. முத்துக்குமாரு குரு பாத சேவை செய்து ஆத்ம ஈடேற்றத்தைப் பெற எண்ணினார். தன் எண்ணத்தையும் விருப்பத்தையும் குருநாதனுக்கு எடுத்தியம்பித் தன்னுடன் தங்குமாறு வேண்டி நின்றார். வந்த வேலைமுடிந்தது என்று எண்ணிய பெரியவர் ஒருநாள் காலை வெளியில் சென்று திரும்பி வரவில்லை. முத்துக்குமாரரோ தம்மை யாட்கொண்ட குருநாதனைத் தேடி எங்கும் காணாமையால் பித்தர் போல் ஆனார். தமையனார் இவர் நிலையையுணர்ந்து கண்டித்தார். ஒருநாள் கிறுக்கல் கவிதையொன்றைஎழுதிவைத்துவிட்டு யாருக்கும் கூறாமல் கடையை விட்டுச் சென்றுவிட்டார். முத்துக்குமாரு தன்னை ஆட்கொண்ட குருநாதனைத் தேடி இந்தியா சென்று விட்டார். அங்கு தன்னை ஆட்கொண்ட குருநாதனைக் கண்டார். அவர் நிழலில் பல வருடங்கள் தங்கிபக்குவநிலையெய்தினார். திருவண்ணாமலையில் ரமண மகரிஷி ஆச்சிரமத்தில் தங்கி இருந்துள்ளார். அருணாசலக் குகைகளில் பலவருடங்கள் தங்கி சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார்.

இலங்கை திரும்பிய சுவாமிகள் கொழும்பு முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் சிறிதுகாலம் தங்கி அருள் உபதேசம் செய்துள்ளார். நயினைஸ்ரீநாகபூஷணி அம்பாளின் வருடாந்த மகோற்சவத்தில் கலந்து அருள் ஆசி வ்ழங்கி பல அடியவர்களை ஆத்மீக சிந்தனையாளர்களாக மாற்றினார்.

சுவாமிகள் தன் இறுதிக்காலத்தில் யாழ். வண்ணார்பண்ணையில் சிவலிங்கப்புளியடியில் உள்ளதன் அடியார் திரு. சுப்பிரமணியம் அவர்களது இல்லத்தில் தங்கியிருந்து அடியார்களுக்கு அருள் ஆசி வழங்கினார். சுவாமிகள் இயல்பாகவேகவிபாடும்திறமை வாய்ந்தவர். இவரால் பாடப்பெற்ற நமசிவாய மாலை நாகேஸ்வரி தோத்திரம், நாகபூஷணி அந்தாதி என்பனவாகும்.

நயினாதீவில் இன்று எண்ணிக்கை தெரியாத கல்வியாளர்கள், அறிஞர்கள் உருவாகுவதற்கு முன் மூத்த உபாத்தியாயர் அதாவது பெரியவாத்தியார் என்று மக்களால் அழைக்கப்பட்ட நயினை மண் தந்த மூத்த ஆசான் அதிபர் திரு.ச.நா. கந்தையா அவர்கள் சுவாமிகளின் அருள் அலையில் அள்ளுண்ட முதல் சிஷ்யன் நயினையில் பண்டிதர்கள், வித்துவான்கள், சைவப்புலவர்கள்தோன்ற வழிகாட்டிய சுவாமிகளின் அருளில் சங்கமித்த பெரிய வாத்தியார் சுவாமிகள் தான் வைத்து வழிபட்ட தங்கவேலை அவருக்கு வழங்கினார்.

கலாபூஷணம்
நயினை நாகமணி
கோபால்கிஷ்ணன்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1327

Search for people, places and things | Nagendram Home

### கபிலா

கணவன்: நீ சமைச்ச இந்த சாப்பாட்டை என்னன்னு சொல்லுவேன்
மனைவி: ஏன்?



கணவன்: சொர்க்கத்துக்கு போனா எமராஜா கேப்பாரு, என்னத்த சாப்பிட்டு செத்துப் போனேன்னு?

### அமலினி


செல்லம் உனக்கு தீபாவளிக்கு சேலை எடுத்து தரவா? இல்ல சுடிதார் எடுத்து தரவா?



உங்களுக்கு எது துவைக்க ஈஸியா இருக்கோ, அதையே எடுத்துக் குடுங்க...

### அச்சுதன்

நோயாளி: டாக்டர் எனக்கு இருக்கிற நோய் வெளிய தெரிய வேணாம்



டாக்டர்: கவலையேபடாதீங்க, நாங்க உங்களையே வெளிய காமிக்கமாட்டோம்

### அமிர்தா

கணவன்: ஏன்டி எப்போ பார்த்தாலும் கோபமா எரிஞ்சு விழுற?



மனைவி: நீங்க தானே சொன்னீங்க... கோபப்படுறப்ப நான் ரொம்ப அழகா இருக்கேன்னு...

### அம்புஜா

உள்ளத்தில்
இருக்கும்
சோகத்தை
மறைக்க
என் உதடுகள்
போடும்
நாடகமே
இந்த
புன்னகை



### அபிஷேக்

சேர் இங்க சாப்பாடு
எங்க விக்கும்?



சாப்பிடும் போது
தொண்டையில விக்கும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெளிநாடு

## இந்தியா-பாலஸ்தீனம் இடையே ஆறு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(ரமல்லா)

பிரதமர் மோடி, ஜனாதிபதி மெகமூத் அப்பாஸ் முன்னிலையில் இந்தியா-பாலஸ்தீனம் இடையே 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

நேற்று முன்தினம் பாலஸ்தீனத்தின் மேற்கு கரை நகரான ரமல்லாவுக்கு சென்றார்.

இந்தியப் பிரதமர் ஒருவர் பாலஸ்தீனம் சென்றது இதுவே முதல்முறை. ரமல்லா சென்றடைந்த மோடி தனது டுவிட்டர் பதிவில், "இது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம். இருநாடுகளின் உறவை இன்னும் வலுப்படுத்த உதவும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி, ஜனாதிபதி மெகமூத் அப்பாஸ் இடையே இருநாடுகளின் உறவுகள், பிராந்திய மற்றும் சர்வதேச பொதுப் பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து இரு தலைவர்களின் முன்னிலையிலும் கல்வி, மருத்துவம், பெண்கள் மேம்பாட்டு மையம் அமைப்பது உள்ளிட்டவை தொடர்பாக 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் ரூ.325 கோடி) மதிப்பில் 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது. (10)

## தென்கொரியாவில் மிதமான நிலநடுக்கம் குளிர்கால ஒலிம்பிக் தொடரில் குழப்பமில்லை

(சியோல்)

தென்கொரியாவின் பியாங்யாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த சனிக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், பியாங்யாங் நகரில் இருந்து தெற்கு பகுதியில் 80 கி.மீ தொலைவில் இருக்கும் 4.7 ரிக்டர் அளவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மிதமான நிலநடுக்கம் என்பதால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பியாங்யாங் நகரில் எவ்வித அதிர்வும் உணரப்படவில்லை என ஒலிம்பிக் அதிகாரிகள் வட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## பாலஸ்தீன கிராண்ட் காலர் விருது பெற்றார் மோடி



(ரமல்லா)

பாலஸ்தீனத்தில் வெளிநாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாக கருதப்படும் கிராண்ட் காலர் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி அரசு முறைப் பயணமாக பாலஸ்தீனம், யு.ஏ.இ. ஓமன் ஆகிய மூன்று நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜோர்தானிலிருந்து பாலஸ்தீனத்தின் ரமல்லா நகருக்கு சென்ற மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. யாசர் அராபத் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய மோடி, அந்நாட்டு ஜனாதிபதி முகமது அப்பாசை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.


இதையடுத்து, வெளிநாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் பாலஸ்தீனத்தின் மிக உயர்ந்த விருதான கிராண்ட் காலர் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

இது தொடர்பாக பிரதமர் மோடி தெரிவிக்கையில், எனக்கு வழங்கப்பட்ட விருது அனைத்து இந்தியர்களையும் கௌரவிப்பது போன்றது. இந்தியாவுக்கு பாலஸ்தீனம் பெருமை சேர்த்துள்ளது.

இந்திய வெளியுறவு கொள்கையில் பாலஸ்தீனத்திற்கு முக்கிய இடம் உள்ளது.

துணிச்சலுக்கு உதாரணமான இந்நாட்டு மக்கள், மகத்தான தியாகங்களை செய்துள்ளனர். பாலஸ்தீனம் அமைதியான நாடாக திகழும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## பேருந்து தடம் புரண்டு விபத்து கொங்கொங்கில் 18 பேர் பலி





(கொங்காங்)

சீனாவின் தெற்கு பகுதியிலுள்ள கொங்கொங்கில் இரட்டை அடுக்கு பேருந்து கவிழ்ந்த விபத்தில் சிக்கி 3 பெண்கள் உட்பட 18 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் தெற்கு பகுதியிலுள்ள கொங்காங்கின் தைபோ நகரில் வீதியில் வேகமாக சென்று கொண்டிருந்த இரட்டை அடுக்கு பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தில் பயணம் செய்தவர்களில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் என கூறப்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் 50 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்கள் அருகில் உள்ள 12 வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (10)

## ஐ.நா. அமைதிப்படைத் தலைவியாக வரலாற்றில் இடம் பிடித்த பிரிட்டன் பெண்

(நியூயோர்க்)

ஐ.நா. சார்பில் சூடான் நாட்டுக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படை குழுவின் தலைவராக முதல்முறையாக பிரிட்டனை சேர்ந்த பெண் இராணுவ அதிகாரியான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார்.

உலகில் போர்ப்பதற்றம் அதிகம் உள்ள பகுதிகளிலும், கலவரங்கள் அதிகம் நிகழக்கூடிய பகுதிகளுக்கும் ஐ.நா. அமைதிப்படையினர் அனுப்பி வைக்கப்படுவர். அமைதிப்படையில் பல நாடுகளை சேர்ந்த வீரர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒன்றாக இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதோடு, அப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபடுவார்கள்.

இந்நிலையில், கலவரம் அதிக அளவில் நிகழக்கூடிய சூடானின் தெற்கு பகுதிக்கு சமீபத்தில் ஒரு ஐ.நா. அமைதிப்படை குழு அனுப்பப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவராக பிரிட்டன் நாட்டை சேர்ந்த பெண் லெப்டினனட் கர்னலான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார். ஐ.நா. அமைதிப்படையின் தலைவராக ஒரு பெண் பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து கேட்டி ஹிஸ்லோப் கூறுகையில், உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு படைகளில் பெண்களுக்கு சரியான இடம் வழங்கப்படுவதில்லை. எப்படியோ எனக்கு ஒரு மரியாதையான இடம் கிடைத்துள்ளது. என்னைப்போன்ற பெண்கள் ராணுவத்தில் இணைவதற்கு நான் ஒரு முன்மாதிரியாக இருப்பேன் என நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கேட்டி ஹிஸ்லோப்பிற்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## அபுதாபியில் இந்துக்கோவிலுக்கு அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி



(அபுதாபி)

அரசு முறை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி ஐக்கிய அமீரகத்தின் அபுதாபி நகரில் கட்டப்படும் முதல் இந்து கோவிலுக்கு அடிக்கல் நாட்டினார்.

வளைகுடா நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வரும் பிரதமர் மோடி, ஜோர்தான், பாலஸ்தீனத்தை தொடர்ந்து தற்போது ஐக்கிய அமீரகத்தில் உள்ளார். அங்கு பட்டத்து இளவரசர் முகம்மது பின் சயீத் அல் நய்ஹானை சந்தித்து பேசினார். அப்போது, இரு தரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தியர்கள் கூடிய அரங்கில் இந்த நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போது.

வளைகுடா நாடுகள் இந்தியர்களின் இரண்டாவது தாயகமாகவுள்ளது. இங்கு இந்து கோவிலை கட்ட அனுமதித்த பட்டத்து இளவரசருக்கு 125 கோடி இந்தியர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோவில் கட்டடக் கலை மற்றும் வசீகரம் ஆகியவற்றிற்கான தனித்துவம் மிக்க ஒன்றாக மட்டுமன்றி, வாசுதைவ குடும்பகம் என்ற செய்தியை உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கு கொண்டு சேர்க்கும்.

வணிகத்தைத் தாண்டியும் இந்தியா - ஐக்கிய அமீரக உறவு என்பது தனித்துவமானது. பொருளாதாரத்தில் இந்தியாவின் சாதனைகளை அனைவரும் பேசுகின்றனர்.

எளிதில் தொழில் தொடங்க உகந்த நாடுகளின் பட்டியலில் 142-வது இடத்தில் இருந்த இந்தியா 100ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (10)

## கடந்த ஆண்டு மசூதி தாக்குதலுக்கு பதிலடி எகிப்தில் தீவிரவாதிகள் 16 பேர் உயிரிழப்பு



(கெய்ரோ)

எகிப்தில் கடந்த ஆண்டு 300-க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்த மசூதி தாக்குதலுக்கு பதிலடியாக வடக்கு சினாய் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தி 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது.

எகிப்து நாட்டின் வடக்கு சினாய் பகுதியில் உள்ள மசூதியில் கடந்த ஆண்டு இறுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 300-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகினர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து, அப்பகுதியில் இயங்கி வரும் தீவிரவாத கிளர்ச்சியாளர்கள் குழு மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இராணுவத்திற்கு ஜனாதிபதி அல்-சிசி உத்தரவிட்டார்.

இந்நிலையில், வடக்கு சினாய் பகுதியில் கடந்த சில நாட்களாக நடத்தப்பட்ட தேடுதலில் 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் 4 தீவிரவாதிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (10)



# வெளிநாடு

## இந்தியா-பாலஸ்தீனம் இடையே ஆறு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(ரமல்லா)

பிரதமர் மோடி, ஜனாதிபதி மெகமூத் அப்பாஸ் முன்னிலையில் இந்தியா-பாலஸ்தீனம் இடையே 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

நேற்று முன்தினம் பாலஸ்தீனத்தின் மேற்கு கரை நகரான ரமல்லாவுக்கு சென்றார்.

இந்தியப் பிரதமர் ஒருவர் பாலஸ்தீனம்சென்றது இதுவே முதல்முறை. ரமல்லா சென்றடைந்த மோடி தனது டுவிட்டர் பதிவில், "இது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம். இருநாடுகளின் உறவை இன்னும் வலுப்படுத்த உதவும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி, ஜனாதிபதி மெகமூத் அப்பாஸ் இடையே இருநாடுகளின் உறவுகள், பிராந்திய மற்றும் சர்வதேச பொதுப் பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து இரு தலைவர்களின் முன்னிலையிலும் கல்வி, மருத்துவம், பெண்கள் மேம்பாட்டு மையம் அமைப்பது உள்ளிட்டவை தொடர்பாக 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் ரூ.325 கோடி) மதிப்பில் 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது. (10)

## தென்கொரியாவில் மிதமான நிலநடுக்கம் குளிர்கால ஒலிம்பிக் தொடரில் குழப்பமில்லை

(சியோல்)

தென்கொரியாவின் பியாங்யாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த சனிக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், பியாங்யாங் நகரில் இருந்து தெற்கு பகுதியில் 80 கி.மீ தொலைவில் இருக்கும் 4.7 ரிக்டர் அளவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மிதமான நிலநடுக்கம் என்பதால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பியாங்யாங் நகரில் எவ்வித அதிர்வும் உணரப்படவில்லை என ஒலிம்பிக் அதிகாரிகள் வட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## பாலஸ்தீன கிராண்ட் காலர் விருது பெற்றார் மோடி



(ரமல்லா)

பாலஸ்தீனத்தில் வெளிநாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாக கருதப்படும் கிராண்ட் காலர் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி அரசு முறைப் பயணமாக பாலஸ்தீனம், யு.ஏ.இ. ஓமன் ஆகிய மூன்று நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜோர்தானிலிருந்து பாலஸ்தீனத்தின் ரமல்லா நகருக்கு சென்ற மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. யாசர் அராபத் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய மோடி, அந்நாட்டு ஜனாதிபதி முகமது அப்பாசை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதையடுத்து, வெளிநாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் பாலஸ்தீனத்தின் மிக உயர்ந்த விருதான கிராண்ட் காலர் விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தெரிவிக்கையில், எனக்கு வழங்கப்பட்ட விருது அனைத்து இந்தியர்களையும் கௌரவிப்பது போன்றது. இந்தியாவுக்கு பாலஸ்தீனம் பெருமை சேர்த்துள்ளது.

இந்திய வெளியுறவு கொள்கையில் பாலஸ்தீனத்திற்கு முக்கிய இடம் உள்ளது.

துணிச்சலுக்கு உதாரணமான இந்நாட்டு மக்கள், மகத்தான தியாகங்களை செய்துள்ளனர். பாலஸ்தீனம் அமைதியான நாடாக திகழும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## பேருந்து தடம் புரண்டு விபத்து கொங்கொங்கில் 18 பேர் பலி





(கொங்காங்)

சீனாவின் தெற்கு பகுதியிலுள்ள கொங்கொங்கில் இரட்டை அடுக்கு பேருந்து கவிழ்ந்த விபத்தில் சிக்கி 3 பெண்கள் உட்பட 18 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் தெற்கு பகுதியிலுள்ள கொங்காங்கின் தைபோ நகரில் வீதியில் வேகமாக சென்று கொண்டிருந்த இரட்டை அடுக்கு பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தில் பயணம் செய்தவர்களில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் என கூறப்பட்டுள் ளது.

மேலும் விபத்தில் 50 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்கள் அருகில் உள்ள 12 வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (10)

## ஐ.நா.அமைதிப்படைத் தலைவியாக வரலாற்றில் இடம் பிடித்த பிரிட்டன் பெண்

(நியூயோர்க்)

ஐ.நா. சார்பில் சூடான் நாட்டுக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படை குழுவின் தலைவராக முதல்முறையாக பிரிட்டனை சேர்ந்த பெண் இராணுவ அதிகாரியான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார்.

உலகில் போர்ப்பதற்றம் அதிகம் உள்ள பகுதிகளிலும், கலவரங்கள் அதிகம் நிகழக்கூடிய பகுதிகளுக்கும் ஐ.நா. அமைதிப் படையினர் அனுப்பி வைக்கப்படுவர். அமைதிப்படையில் பல நாடுகளை சேர்ந்த வீரர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒன்றாக இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதோடு, அப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபடுவார்கள்.


இந்நிலையில், கலவரம் அதிக அளவில் நிகழக்கூடிய சூடானின் தெற்கு பகுதிக்கு சமீபத்தில் ஒரு ஐ.நா. அமைதிப்படை குழு அனுப்பப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவராக பிரிட்டன் நாட்டை சேர்ந்த பெண் லெப்டினனட் கர்னலான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார். ஐ.நா. அமைதிப்படையின் தலைவராக ஒரு பெண்பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து கேட்டி ஹிஸ்லோப் கூறுகையில், உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு படைகளில் பெண்களுக்கு சரியான இடம் வழங்கப்படுவதில்லை. எப்படியோ எனக்கு ஒரு மரியாதையான இடம் கிடைத்துள்ளது. என்னைப்போன்ற பெண்கள் ராணுவத்தில் இணைவதற்கு நான் ஒரு முன்மாதிரியாக இருப்பேன் என நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கேட்டி ஹிஸ்லோப்பிற்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## அபுதாபியில் இந்துக்கோவிலுக்கு அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி



(அபுதாபி)

அரசு முறை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி ஐக்கிய அமீரகத்தின் அபுதாபி நகரில் கட்டப்படும் முதல் இந்து கோவிலுக்கு அடிக்கல் நாட்டினார்.

வளைகுடா நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வரும் பிரதமர் மோடி, ஜோர்தான், பாலஸ்தீனத்தை தொடர்ந்து தற்போது ஐக்கிய அமீரகத்தில் உள்ளார். அங்கு பட்டத்து இளவரசர் முகம்மது பின் சயீத் அல் நய்ஹானை சந்தித்து பேசினார். அப்போது, இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தியர்கள் கூடிய அரங்கில் இந்த நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போது.

வளைகுடா நாடுகள் இந்தியர்களின் இரண்டாவது தாயகமாகவுள்ளது. இங்கு இந்து கோவிலை கட்ட அனுமதித்த பட்டத்து இளவரசருக்கு 125 கோடி இந்தியர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோவில் கட்டடக் கலை மற்றும் வசீகரம் ஆகியவற்றிற்கான தனித்துவம் மிக்க ஒன்றாக மட்டுமன்றி, வாசுதைவ குடும்பகம் என்ற செய்தியை உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கு கொண்டு சேர்க்கும்.

வணிகத்தைத் தாண்டியும் இந்தியா - ஐக்கிய அமீரக உறவு என்பது தனித்துவமானது. பொருளாதாரத்தில் இந்தியாவின் சாதனைகளை அனைவரும் பேசுகின்றனர்.

எளிதில் தொழில் தொடங்க உகந்த நாடுகளின் பட்டியலில் 142-வது இடத்தில் இருந்த இந்தியா 100ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (10)

## கடந்த ஆண்டு மசூதி தாக்குதலுக்கு பதிலடி எகிப்தில் தீவிரவாதிகள் 16 பேர் உயிரிழப்பு



(கெய்ரோ)

எகிப்தில் கடந்த ஆண்டு 300-க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்த மசூதி தாக்குதலுக்கு பதிலடியாக வடக்கு சினாய் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தி 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது.

எகிப்து நாட்டின் வடக்கு சினாய் பகுதியில் உள்ள மசூதியில் கடந்த ஆண்டு இறுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 300-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகினர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து, அப்பகுதியில் இயங்கி வரும் தீவிரவாத கிளர்ச்சியாளர்கள் குழு மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இராணுவத்திற்கு ஜனாதிபதி அல்-சிசி உத்தரவிட்டார்.

இந்நிலையில், வடக்கு சினாய் பகுதியில் கடந்த சில நாட்களாக நடத்தப்பட்ட தேடுதலில் 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் 4 தீவிரவாதிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (10)




# ஆளுக்கொரு வேலை

(நேற்றைய தொடர்ச்சி)

"எங்க வீட்ல எங்கப்பாவும் தம்பியும் எதுவும் செய்யமாட்டாங்க. எங்கம்மாவுக்கு நான் உதவி செய்வேன்!" என்றாள் எழிலரசி.

"எங்க வீட்டில எங்கம்மாவுக்கு உதவியா நானும் கூடமாட வேலை செய்வேனே..!" என்றான் குட்டிப் பையன் பஷீர்.

உடனே, சுந்தர் முகம் என்னவோ போலாகி விட்டது. இதைக் கவனித்த கவின்மொழி, "என்னாச்சு, சுந்தர்? ஏன் திடீர்னு என்னவோ மாதிரி ஆயிட்டே?" என்று கேட்டாள்.



"உங்க வீட்டில எல்லோரும் வேலையைப் பகிர்ந்து கொண்டு செய்யிறதைப் பார்த்தா, எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. எங்க வீட்டில எங்கம்மாவுக்கு உடம்பு முடியலேன்னாகூட, யாரும் உதவி செய்யமாட்டாங்க. ரொம்ப முடியலேன்னா கடையிலேர்ந்து சாப்பாடு வாங்கி வந்து சாப்பிடுவோம். உங்க வீடு மாதிரி எல்லா வீடும் இருந்தா ரொம்ப நல்லாயிருக்கும் இல்லே. இனி நானாச்சும் எங்கம்மாவுக்கு உதவியா வீட்டு வேலைகளைச் செய்யப் போறேன்!" என்று உற்சாகம் பொங்க சுந்தர் சொன்னான்.

கவின்மொழியும், எழிலரசியும் "சுப்பர் முடிவு" என்று சுந்தரைப் பாராட்டினார்கள்.

(முற்றும்)




❖ 55- ரோமின் முடிக்குரிய இளவரசன் டிபேரியஸ் கிளோடியஸ் சீசர் பிரிட்டானிக்கஸ் மர்மமான முறையில் இறந்தான். இவனது மரணம் நீரோ மன்னனாக வர வாய்ப்பளித்தது.

❖ 1502- இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற்பயணத்தை வஸ்கொடகாமா லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தார்.

❖ 1733- ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா ஆங்கிலக் குடியேற்ற நாடாக ஜேம்ஸ் ஒக்லிதோர்ப் என்பவரால் அமைக்கப்பட்டது.

❖ 1771- சுவீடன் மன்னன் அடொல்ஃப் பிரெடெரிக் இறந்ததை அடுத்து அவனது மகன் மூன்றாம் குஸ்டாவ் மன்னன் ஆனான்.

❖ 1818- சிலி ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖ 1832- கலாபகசுத் தீவுகளை ஈக்குவாடோர் இணைத்துக் கொண்டது.

❖ 1832- லண்டனில் காலரா பரவியதில் 3000 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 1873- எமிலியோ காஸ்டெல்லார் ஸ்பெயினின் புதிய குடியரசின் பிரதமராக ஆனார்.

❖ 1912- சீனாவின் கடைசி அரசன் க்சுவாண்டொங் முடி துறந்தான்.

❖ 1912- சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்தது.

❖ 1927- முதலாவது பிரித்தானியப் படைகள் ஷங்காய் நகரை அடைந்தன.

❖ 1934- ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.

❖ 2002- யூகோஸ்லாவியாவின் முன்னாள் தலைவர் சிலொபடான் மிலோசெவிச் மீது ஹேக் நகரில் ஐநாவின் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பமாயின.

❖ 2002- ஈரானின் விமானம் ஒன்று கோரமடாத் நகரில் வீழ்ந்ததில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖ 1768- புனித ரோமப் பேரரசின் இரண்டாம் பிரான்சிஸ் (இ. 1835)

❖ 1804- ஹைன்ரிக் லென்ஸ், செருமானிய-இத்தாலிய இயற்பியலாளர் (இ. 1865)

❖ 1809- சார்லஸ் டார்வின், ஆங்கிலேய இயற்கையியலாளர், நிலவியலாளர் (இ.1882)

❖ 1809- ஆபிரகாம் லிங்கன், அமெரிக்காவின் 16வது அரசுத்தலைவர் (இ. 1865)

❖ 1922- உசேன் ஓன், மலேசியாவின் 3வது பிரதமர் (இ. 1990)

❖ 1967- என். ரவிகிரண், தென்னிந்திய சித்திர வீணைக் கலைஞர்

❖ 1969- டேரன் அரோனாப்ஸ்கி, அமெரிக்க இயக்குநர்

**இறப்புகள்**

❖ 1713- சகாந்தர் சா, முகலாயப் பேரரசர் (பி. 1664)

❖ 1804- இம்மானுவேல் கண்ட், செருமானிய மெய்யியலாளர் (பி. 1724)

❖ 1908- ஜி. யு. போப், தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்த அமெரிக்கர் (பி. 1820)

❖ 1916- ரிச்சர்டு டெடிகைண்டு, செருமானிய கணிதவியலாளர், மெய்யியலாளர் (பி. 1831)

❖ 1964- சாம். அ. சபாபதி, இலங்கை வழக்கறிஞர், முதலாவது யாழ்ப்பாண முதல்வர் (பி. 1898)

❖ 1988- எஸ். நடராஜா, இலங்கை வழக்கறிஞர், அரசியல்வாதி, மேலவை உறுப்பினர்

❖ 2009- புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, தமிழீழ ஊடகவியலாளர்

❖ 2009- முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத் தமிழன் (பி. 1982)

❖ 2013- சங்கரலிங்கம் ஜெகந்நாதன், காந்தியவாதி, இந்திய விடுதலைப்போராட்ட வீரர் (பி. 1914)

❖ 2015- நிக் அப்துல் அசீஸ் நிக் மாட், மலேசிய அரசியல்வாதி (பி. 1931)

**சிறப்பு நாள்**

❖ டார்வின் நாள்

❖ சொங்கை நாள் (ஐ.நா.)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 50 | 80 | 120 |
| பூசணி | 50 | 30 | 60 | 50 |
| புடோல் | 60 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 170 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 150 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 210 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 40 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 450 | 200 | 800 | 800 |
| போஞ்சி | 130 | 100 | 60 | 120 |
| கத்தரிதம்பளை | 50 | 30 | — | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 20 | 10 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 75 |
| இராசவள்ளி | 180 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 50 | 80 | 120 |
| முள்ளங்கி | 120 | 50 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 40 | 60 | 80 |

நம்மால் பெரிய காரியங்களைச் செய்து முடிக்க முடியும். ஆனால் அதற்கேற்ப சிந்திக்கும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை. ~ அமீத்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்கள மக்கள் மகிந்தவை ஆதரித்ததன் காரணம் என்ன?

அரசியல் இராஜதந்திரம் இல்லாத எந்த இனமும் முன்னேறியதான வரலாறு சரித்திரத்தில் இல்லை.

போரையும் போர் அழிவுகளையும் தமக்குச் சாதகமாக்கி தங்களை வளர்த்தெடுத்த நாடுகளையும் மக்களையும் பற்றி அறியும் போதெல்லாம் ஆச்சரியத்தின் உச்சத்தில் எங்கள் சிந்தனை போய்விடுகிறது.

ஆக, சமயோசித புத்திசாலித்தனம் என்பதும் இராஜதந்திரம் என்பதும் மிகவும் அவசியம்.

எனினும் இது விடயத்தில் எங்கள் பலயீனம் எமக்குத் துன்பத்தையும் சோதனையையும் தருகிறது.

அதேவேளை சிங்கள மக்களதும் சிங்கள அரசியல்வாதிகளினதும் இராஜதந்திரம் மிகவும் அற்புதம் எனலாம்.

இதற்குப் பல உதாரணங்களைச் சான்றாதாரப்படுத்த முடியும்.

நேற்று முன்தினம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகளின்படி தென்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இவ்வாறு அவர் வெற்றி பெறுவதற்கு எங்கள் தமிழ் அரசியல் தலைமையே காரணம் எனலாம்.

இதை நாம் கூறும்போது, இஃதென்ன என்று நீங்கள் நெற்றிப் புருவத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

இருந்தும் தமிழ் அரசியல் தலைமையின் வெகுளித்தனமும் அவர்களின் இராஜதந்திரப் பலயீனமும் சேர்ந்தே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு வித்திட்டது.

அதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபில் தமிழ் மக்களுக்கான அனைத்து அதிகாரமும் இருக்கிறது; சமஷ்டி என்ற சொற்பதம் இல்லையேயன்றி, சமஷ்டிக்கான அதிகாரங்கள் அதில் உள்ளன.

தமிழ் மக்களின் அத்தனை உரிமைகளும் அதிகாரங்களும் இருக்கின்றபோதும் அவற்றையெல்லாம் வெளிப்படையாகக் கூறமுடியாது என்று தமிழ் அரசியல் தலைமை கூறியதால், சிங்கள மக்கள் பயந்து போயினர்.

ஆம், எங்களுக்குத் தெரியாமல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப் போகிறார் என்று அஞ்சினர்.

எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை வெற்றியடையச் செய்வதன் மூலமாகவே, இதற்கு முடிவு கட்ட முடியும் என்று சிங்கள மக்கள் முடிவு செய்ய, மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றார்.

எமக்கு எதுவும் இல்லாத தீர்வுத்திட்டத்தில் எல்லாம் இருக்கிறது என்று கூறி மகிந்த ராஜபக்ஷவை பலமடையச் செய்ததைத் தவிர வேறு எதையும் தமிழ் அரசியல் தலைமை சாதிக்கவில்லை

இவை ஒருபுறம் இருக்க, இங்கு தமிழ் மக்கள் தங்களின் வாக்குகள் மூலம் தமிழ் அரசியல் தரப்புக்களை நிதானமாகச் சிந்தியுங்கள் என்று எச்சரிக்கைப்படுத்தியுள்ளனர்.

எனினும் எங்கள் அரசியல் தரப்புகள் இது பற்றியெல்லாம் சிந்திக்குமா? தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஆதங்கத்தை இனிமேலாவது நம்மவர்கள் புரிந்துகொள்வார்களா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஐ.தே.வேட்பாளரின் வீடு மீது தாக்குதல்

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் மேலதிக வேட்பாளருடைய இலலத்தின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொத்தாந்தீவில் அமைந்துள்ள குறித்த வேட்பாளரான நூர்தீன் நலீம் என்பவருடைய வீட்டின் மீதே நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உடப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமீரகம சேவைகள் இல்லத்தின் மீதும் இனந்தெரியாதவர்கள் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பாகவும் முந்தல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சேவைகள் இல்லத்தில் இம்முறை முதலாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது. இந்த சேவைகள் இல்லத்தின் முன்பக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகை, கதவு மற்றும் ஜன்னல் ஆகியவை கல்லினால் அடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உடப்பு மற்றும் முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம)

## புத்தளம் அட்டவில்லு பகுதியில் மூதாட்டியின் வாக்கு திருட்டு

### பொலிஸில் முறைப்பாடு

புத்தளம் மாவட்டம் அட்டவில்லு கிராமசேவகர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட வாக்குச் சாவடியில் வாக்களிகக் சென்ற மூதாட்டி ஒருவரின் வாக்கு திருடப்பட்டுள்ளது.

மேரி கெலிஸ்டா (வயது -70) என்ற குறித்த மூதாட்டி வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்ற பின்னர், அவருடைய வாக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெற்ற பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென புத்தளம் மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான என்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

தமது வாக்கு் திருடப்பட்டு தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

### புதிய ரயில்வே திட்டம்

மாத்தறை கதிர்காமத்திற்கிடையிலான புதிய ரயில்வேத் திட்டம் 2020ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களாக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாத்தறையில் இருந்து பெலியத்த வரையில் முதலாம் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக 228 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று போக்குவரத்து மற்றும சிவில் விமான சேவை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் "செயற்பட்டுமகிழ்வோம்" மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். சர்வமத பேரவையின் நிர்வாக உத்தியோகத்தரும் தாரணி பதிப்பக உரிமையாளருமான ரஜிகலா ஜெயராஜ், உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் ரி.மாதவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### இம்சை கூடாது என்று கூறுவதேன்?

இம்சை என்றால் கொல்வது என்று அர்த்தமல்லவா? ஆனால் கொல்வது மட்டுமே இம்சையாகாது. பிற உயிர்களைத் துன்புறுத்துவது, அச்சுறுத்துவது, சிரமத்திற்குள்ளாவது அனைத்துமே இம்சையாகும். இந்தச் செயல்களை மூன்று விதத்தில் செய்யலாம்.

துன்பப்படுத்துவது என்றால் வார்த்தைகளாலும் உடல் ரீதியாகவும் மனதளவிலும் துன்பப்படுத்தலாம். கடுமையான வார்த்தைகளைக் கூறுவது வார்த்தைகளால் துன்பப்படுத்துவதாகும்.

அந்த வார்த்தைகள் மனதைப் பாதித்தால் உடலுக்கும் மனதிற்கும் ஒரே மாதிரி பாதிப்பு ஏற்படும்.

வெட்டுதல், குத்துதல், அடித்தல் போன்றவை உடல் ரீதியாகத் துன்புறுத்தும் செயல்களாகும். கடுமையான வார்த்தைகள் மனதைப் பாதிக்கிறது என்றால் வெட்டுக்குத்து போன்ற உடல் ரீதியிலான துன்புறுத்தல்களாகும்.

இவை அனைத்தும் இம்சைகள். இவற்றால் துன்பங்களே மிஞ்சுகின்றன. இவற்றால் மகிழ்ச்சிக்கு வழியில்லை. மற்றவர்களைத் துன்புறுத்துவது பாவமாகும். பாவச் செயல்களின் பலனும் பாவம்தான்.

அதன் காரணமாக இறந்து நரகத்திற்குச் செல்வார்கள். பாவிகள் மீண்டும் பாவம் செய்கிறார்கள்.

முதலில் தவறு செய்யத் தயங்குவார்கள். ஒருமுறை தவறு செய்துவிட்டால் பின்பு தயங்கமாட்டார்கள். மீண்டும் மீண்டும் பாவம் செய்வதென்பது சொந்த வாழ்க்கையை பாவகுண்டத்தில் வீழ்த்தி துக்கப்படுவதாகும். எனவே இம்சை செய்வதோ பிறரைத் துன்பப்படுத்துவதோ கூடாது என்று சொல்லப்படுகிறது. (தொடரும்)

## பிரம்மாவின் பகலும் பிரம்மாவின் இரவும்- 03


ஞானம் பெற்ற பிரம்மனுக்கு மூன்றாவது கண் விழித்தது. உண்மை புரிந்தது. இருள் நீங்கி ஒளி தெரிந்தது. அதன்பின் பூமியில் வாழ்ந்த ஏனைய ஜீவாத்மாக்களுக்கும் இந்த ஞானத்தைப் போதிப்பதற்கு ஜோதி வடிவாகிய பரமனுக்கு ஒரு சரீரம் தேவைப்பட்டது. பரம்பொருளோ பிறப்புக்கும் இறக்கும் அப்பாற்பட்டவர். அதனால் பிரம்மதேவருடைய ஸ்தூல சரீரத்தைப் பயன்படுத்தி பிரம்மாவின் கமல வாய் மூலம் அனைவருக்கும் ஆத்மஞானத்தைப்போதித்தார். ஞானம் பெற்ற ஆத்மாக்கள் அனைவரும் மானசீகமாக மறுபிறவி எடுத்தனர். ஈஸ்வரனால் பிரம்மனுடைய கமலவாய் மூலம் உண்மை உணர்த்தப்பட்டதால் அவர்கள் பிரம்மாவின் வாய்வழித் தோன்றல்கள் ஆகினர்.

இவ்வாறு ஞானத்தைப் பெற்று பழைய சரீரத்தில் புதிய வாழ்வை அடைந்த பாக்கியசாலி ஆத்மாக்கள், தேவர்களைக் காட்டிலும் அதிமேலான குலத்தைச் சேர்ந்தவர்களாக அறியப்பட்டனர். தமக்கேற்பட்ட ஞானத் தெளிவால் வாழ்வைப் புனிதமாக்கிக் கொண்டு ராஜரிஷிகளாக மாறிய அவர்கள், சிவன் நினைவில் பூமியில் தவம் புரிந்தனர். பிரம்மனுடன் இணைந்து அவர்கள் தவமியற்றிய காலப்பகுதி நள்ளிரவைத் தொடர்ந்து வருகின்ற அதிகாலையின் இருள் சூழ்ந்த நேரமாகும். இதுவே பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. தொடர்புகளுக்கு: 077 923 4562

பிரம்மகுமாரிகள்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தன்னிறைவுத் திட்டம்



நீங்கள் முதலில் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக்கூடாது. இயற்கையிலேயே உங்களிடம் அபரிமிதமான ஆற்றல்களும், திறமைகளும் அமைந்திருக்கின்றன. இதை உணருங்கள். அவற்றைப் பெருக்கி நீங்களும் பயன் பெற்று, பிறருக்கும் தாராளமாக உதவ முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அமைதியாக உட்கார்ந்து நீங்கள் "எங்கு, எவ்வாறு, என்னவாக இருக்கிறீர்கள்?" என்று கணித்துக் கொள்ளுங்கள்.

அதாவது - வயதில், உடல் வலுவில், உடல் நலத்தில், கல்வியில், தொழில் திறனில், அறிவு வளர்ச்சியில், அதிகாரத்தில், செல்வ நிலையில், சூழ்நிலையமைப்பில் - நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் என்று கூர்ந்த அறிவோடு கணித்துக் கொள்ளுங்கள். இவ்வளவு இருப்பையும் வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் பிறரிடமிருந்து எதையோ எதிர்பார்க்க வேண்டும்? தான் குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்ற அளவில் ஒவ்வொருவருக்கும் ஐவகைக் கடமைகள் உள்ளன.

உங்களிடமுள்ள இருப்பை வைத்துக் கொண்டு, எந்த அளவில் எவ்வாறு இக்கடமைகளைச் செய்து, பிறர்க்கு எப்பொழுதும் உதவி செய்து கொண்டே இருக்க முடியும் என்னும் பெருந்தன்மையை மனதில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்காக எந்தத் திறமை அல்லது இருப்பை வளர்த்துக் கொள்ள முடியுமோ அந்த அளவு அதற்காகவும் ஆற்றலைச் செலவிட வேண்டும்.

இந்த மாதிரியான உயர்ந்த மனநிலையை வளர்த்துக் கொள்ள ஒரு மாத காலம் இன்று முதல் பழகிக் கொள்ளுங்கள். இந்த தன்னிறைவுத் திட்டத்தைத் தான் நமது மன்றத்தைச் சேர்ந்த அன்பர்களுக்கு வலியுறுத்தி வருகிறேன். இந்தத் திட்டத்தில் மனச்சோர்வுக்கோ, சினத்திற்கோ, கவலைக்கோ இடமில்லை. தன் முயற்சியில், செயலில் விளைவைக் காணும் "கர்மயோகம்" இதில் அடங்கியிருக்கிறது.

# அதிர்ஷ்டம் கொடுத்தது பிங்கலர் ஜெர்சி அடித்து நொருக்கியது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 4 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ் பர்க் வாண்டரர்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி தலைவர் விராட் கோலி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். தொடக்க ஆட்டக் காரர்களாக ரோகித் சர்மாவும், ஷிகர் தவானும் களமிறங்கினர். ரோகித் சர்மா 5 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரபாடா பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பின் தலைவர் விராட் கோலி களமிறங்கினார். தவான், கோலி இருவரும் அரை சதம் கடந்தனர்.

இடையில் மழையின் காரணமாக ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது. பின்னர் போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில் கோலி ஆட்டமிழந்தார். அவர் 83 பந்துகளில் 75 ஓட்டங்கள் (7 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) எடுத்தார்.

கோலி, தவான் ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்கு 158 ஓட்டங்கள் சேர்த்தது. சிறப்பாக விளையாடிய தவான் சதம் அடித்தார். இது அவரது 13 ஆவது சதமாகும்.

அவரை தொடர்ந்து ரகானே களமிறங்கினார். சதமடித்த தவான் 109 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் 11 பவுண்டரிகளும், இரண்டு சிக்ஸர்களும் அடித்திருந்தார். அவரைத் தொடர்ந்து ரகானேவும் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் டோனி மட்டும் ஓரளவு விளையாடினார்.

இதனால் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்கள் எடுத்தது. டோனி 42 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். தென்னாபிரிக்கா அணி பந்துவீச்சில் ரபாடா, நிகிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களும், மோர்னே மார்கல், கிறிஸ் மோரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 290 ஓட்டங்களை இலக்காக கொண்டு தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக மார்க்ரமும் ஆம்லாவும் களமிறங்கினர். இருவரும் தொடக்கத்தில் இருந்தே அடித்து ஆடினர். அணியின் எண்ணிக்கை 42 ஆக இருந்தபோது, மார்க்ரம் பும்ரா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது இடியுடன் கூடிய மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அதன்பின், சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு பிறகு ஆட்டம் தொடங்கியது. தென்னாபிரிக்கா 28 ஓவர்களில் 202 என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

ஒருபுறம் கிளாசன் அதிரடியாக ஆட, பெலுகோவியாவும் அடித்து ஆடினார். இருவரும் சேர்ந்து கடைசி 11 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுக்க, தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது. அந்த அணி 25.3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் குல்தீப் யாதவ் 2 விக்கெட்டும், பும்ரா, பாண்ட்யா, சாஹல் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகன் விருதை கிளாசன் பெற்றார்.

இந்த ஆட்டத்தில் தோற்றாலும் இந்திய அணி 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகளுக்கு இடையிலான அடுத்த போட்டி இன்று நடைபெறுகிறது. (க)

# நூறாவது போட்டியில் நூறு அடித்து சாதனை படைத்த




தனது 100வது ஒருநாள் போட்டியில் இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா இடையேயான 4வது ஒருநாள் போட்டி ஜோகன்ஸ்பெர்க்கில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஷிகர் தவான் தனது 100வது ஒருநாள் போட்டியான இந்த போட்டியில் சதம் விளாசினார். இது அவரது 12வது ஒருநாள் போட்டி சதமாகும். (க)

# நான் தமிழ் படிக்கிறேன் டுவிட் விட்ட இம்ரான்



ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாட உள்ள தென்னாபிரிக்க அணி வீரர் இம்ரான் தாஹிர், தனக்கு தமிழ் கற்றுக் கொடுப்பவர் யார் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்தாண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல். தொடரில், தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாட இருக்கிறார்.

இந்நிலையில், இம்ரான் தாஹிர் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு தமிழ் கற்றுக் கொடுக்க உள்ளார். அவரின் புகைப்படத்தை, தாஹிர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இம்ரான் தாஹிர், இதற்கு முன்பு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல, ஹர்பஜன் சிங்கிற்கும் திண்டுக்கல்லை சேர்ந்த சரவணன் என்பவர், தமிழ் கற்றுக் கொடுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (க)

# கோலியின் அணுகுமுறை பிடித்திருக்கிறது

## அப்ரிடி தெரிவிப்பு



இந்திய அணித்தலைவர் விராட் கோலியின் அணுகுமுறை தன்னை கவர்ந்துள்ளதாக பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஷாகித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

'தற்போதைய சூழலில் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக விராட் கோலி உள்ளார். களத்தில் ஆக்ரோஷமாக செயற்படும் அவரின் அணுகு முறை, என்னை வெகுவாக கவர்ந்துள்ளது.

எனது தொண்டு நிறுவனத்துக்காக Bat, ஜெர்சி ஆகியவற்றை கோலி வழங்கி வருகிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில், இந்திய அணியின் செயற்பாடு அபாரமாக உள்ளது.

கடந்த காலங்களில், இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் தடுமாறுவதைத்தான் பார்த்து இருக்கிறோம். ஆனால், தற்போது தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை, இந்திய அணி வெளிப்படுத்தி வருகிறது' என தெரிவித்துள்ளார். (க)

# உலக சாதனை படைத்தார் சுழல்பந்து வீச்சாளர் ஹேரத்



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இடது கை பந்து வீச்சாளர் என்ற புதிய உலக சாதனையை இலங்கை பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் படைத்துள்ளார்.

இலங்கை - வங்கதேசம் அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை 215 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த போட்டியில் இலங்கை இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

4 ஆவதாக தைஜுல் இஸ்லாம் விக்கெட்டை வீழ்த்திய போது ஹேரத் புதிய சாதனை ஒன்றை படைத்தார். அதாவது, டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இடது கைப் பந்து வீச்சாளர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

ஹேரத் இதுவரை மொத்தம் 415 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இதற்கு முன்னர் பாகிஸ்தான் இடதுகை பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் 414 விக்கெட்கள் வீழ்த்தியதே சாதனையாக இருந்த நிலையில் அதை ஹேரத் முறியடித்துள்ளார்.

இந்நிலையில் ஹேரத்துக்கு குமார் சங்கக்காரா, சச்சின் டெண்டுல்கர் போன்ற ஜாம்பவான்கள் டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (க)

## தமிழ் மக்களின்...

டுள்ள பாரிய மாற்றத்தை கருத்தில் எடுத்து, தனிமனித விருப்பு வெறுப்புக்களை கைவிட்டு ஒரே திசையில் பயணிக்கின்ற நாம் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். நாட்டில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, இத் தேர்தலில் வடக்கு கிழக்கில் 8 மாவட்டங்களிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது போட்டியிட்டிருந்தது. இவற்றில் 56 சபைகளில் போட்டியிட்ட நிலையில் அவற்றில் 40 சபைகளில் கூட்டமைப்பானது முன்னிலையிலும் உள்ளது. வெளியாகியுள்ள முடிவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது வடக்கு கிழக்கில் 7 மாவட்டங்களில் கூட்டமைப்பானது மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது.

அதே நேரம் தெற்கில் பாரிய சூறாவளி ஏற்பட்டது போன்று ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்றன படுதோல்வியடைந்து மகிந்த அணி மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ள நிலையில் அவற்றோடு ஒப்பிடும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பாரிய வெற்றியை பெற்றுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலோடு ஒப்பிட்டு பார்க்கும் போது வடக்கு கிழக்கில் யாழ்ப்பாணத்தை விட ஏனைய மாவட்டங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கான வாக்கானது அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கான வாக்கானது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸை பொறுத்த வரையில் முக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு யாழில் ஏற்பட்ட பின்னடைவு குறித்து நாம் ஆராய்ந்து அவற்றை களைவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

மேலும் இவ் உள்ளூராட்சி தேர்தலானது தெற்கிலே ஏற்படுத்தியுள்ள மாற்றமானது தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதிலே பேரிடியாக வந்துள்ளது. குறிப்பாக புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்ற மக்கள் ஆணையாக இத் தேர்தலை சில கட்சிகள் பிரசாரம் செய்திருந்தன. இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவ்வாறு நிராகரிக்கின்ற வகையில் வாக்களித்ததுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு யாழில் ஏற்பட்ட பின்னடைவும் அதனால் ஏற்பட்டதல்ல.

அதேபோன்று மகிந்த அணியானது குறித்த புதிய அரசியலமைப்பின் ஊடாக நாடு இரண்டாக பிளவுபடப்போகின்றது என பிரசாரம் செய்த நிலையில் சிங்கள மக்கள் தற்போதுள்ள அரசாங்கத்தை நிராகரிக்கின்ற வகையில் வாக்களித்துள்ளனர். அத்துடன் சிங்கள மக்களின் இவ் மாற்றத்தில் ஊழல் மோசடிகள், நிர்வாக திறனற்ற தலைமைகள் போன்றனவும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. குறிப்பாக தெற்கில் ஏற்பட்டுள்ள இம் மாற்றமானது தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வான புதிய அரசியலமைப்பை பெற்றுக்கொள்வதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையிலே நாம் சில சொற்களின் அர்த்தம் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்க அதே புதிய அரசியலமைப்பு நாட்டை பிரிக்க போகின்றது என்ற அடிப்படையில் அதனை சிங்கள மக்கள் நிராகரித்துள்ளார்கள்.

எனவே தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வொன்றை காணும் வகையில், குறித்த ஒரே கொள்கையின்பால் அதாவது சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் பயணிக்கின்ற கட்சிகள் தற்போது ஒன்றாக சேர்ந்து பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் மகிந்த அணியால் தெற்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய மாற்றத்தை கருத்தில் எடுத்து, எமக்கு இடையேயான தனிமனித விருப்பு வெறுப்புக்களை கைவிட்டு ஒரே திசையில் பயணிக்கின்ற நாம் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-4)

## கூட்டமைப்பின் தலைமை...

ள்ளார்.

மேலும் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில் தூய்மையான அரசியலை உருவாக்க தயாராகவுள்ளவர்கள் தம்மோடு இணைந்து தமிழ்த் தேசிய பேரவையின் தரப்பாக செயற்பட தயாராக இருந்தால் அவர்களை அரவணைக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் மக்கள் உறுதியாக தேசியத்தோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை 2009. மே மாதம் 18ஆம் திகதியில் இருந்து இருந்தது. ஆனால் அந்த நம்பிக்கைக்கு துரோகமிழைக்கின்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததையடுத்து அதனை தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தினாலேயே நாம் 2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறியிருந்தோம். இவ்வாறான நிலையில் நாம் முன்வைத்த கருத்துக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீதான எரிச்சல் காரணமாகவோ, விரக்தியின் காரணமாகவோ அல்ல.

அவை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான கொள்கை ரீதியான விமர்சனங்களேயாகும். இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களுக்கு துரோகமிழைத்து ஒற்றையாட்சிக்கு இணங்கி, பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டு வருகின்றார்கள் என்ற அடிப்படையின் காரணமாகவே நாம் முன்வைத்த கருத்துக்கள் கடுமையானதாக இருந்தது. இதேநேரம் நாம் இன்னுமொரு விடயத்தையும் மிகத் தெளிவாக கூறி வந்துள்ளோம். அதாவது நாம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கோ அல்லது அதன் பங்காளி கட்சிகளுக்கோ எதிராக செயற்படுகின்றவர்கள் அல்ல எனவும் அவர்கள் தமிழ் மக்களுக்கு செய்கின்ற துரோகங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றோம் என்பதையும் மிகத் தெளிவாக கூறி வந்துள்ளோம். இந்நிலையில் இன்று தமிழ் மக்கள் மிகப்பெரிய மாற்றத்திற்கு அடித்தளம் ஒன்றை போட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழ்தேசிய பேரவையின் கொள்கை, உண்மையில அடிப்படை தமிழ் தேசிய கூட்டமைப்பின் கொள்கையாக இருந்த கொள்கையை ஏற்றுக் கொண்டு நேர்மையான ஊழலற்ற, ஆட்சியை நடத்தி புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நாம் ஒன்றாக தமிழ் தேசிய கூட்டமைப்போடு இணைந்து செயற்பட தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அவ்வாறு நாம் இணைந்து செயற்பட வேண்டுமாயின் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்துவிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைகளும், அவர்களது தீர்மானங்கள் எல்லாவற்றிற்கும் ஆமோதித்து ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைமைகளும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறப்பட்டாலே நாம் கூட்டமைப்போடு இணைந்து செயற்பட தயார். அதுவரை கூட்டமைப்போடு ஒருமித்து பயணிக்க முடியாது.

இதேவேளை இவ் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில் தூய்மையான அரசியலை உருவாக்க தயாராகவுள்ளவர்கள் எம்மோடு இணைந்து தமிழ்த் தேசிய பேரவையின் தரப்பாக செயற்பட தயாராக இருந்தால் அவர்களை அரவணைக்க நாம் தயாராகவே இருக்கின்றோம். (ம-4)

# தமிழ் மற்றும் தேசிய உணர்வு எனக்கு உள்ளேயும் இருக்கின்றது

### நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்

(யாழ்ப்பாணம்)

என் உள்ளேயும் தமிழ் மற்றும் தேசிய உணர்வு அதிகமாகவே இருக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அந்த அறிக்கையில்,

எனது அரசியல் பயணத்திலே பல ஆண்டுகளாக பலம் சேர்த்த மக்களுடைய துன்பங்களே எப்போதும் என்முன்னே பிம்பங்களாக நிழலாடும்.

உங்கள் உணர்வுகளை பிரதிபலிப்பவனாக தமிழ் மக்களுக்கான எனது சேவை எச்சந்தர்ப்பத்திலும் தொடரும் என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகின்றேன்

எமது நேர்த்தியான பயணத்தை திசைதிருப்புபவர்களுக்கு எதிராக இன்று மக்கள் இம்மாபெரும் ஆணையை வழங்கி இருப்பது எமது பயணத்திற்கான அங்கீகாரமே.

நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் சுதந்திர கட்சி சார்பாக எனது தலைமையில் புதிய அபிவிருத்தி இலக்குகளை அடையக் கூடிய வகையில் மக்கள் தடம் பதியப்பட்டிருக்கின்றது.

இந்த உள்ளூராட்சி சபை தேர்தலிலே சுயநலவாதிகளின் எதிர்பார்ப்புக்களை உடைத்து ஆதரவை வழங்கியதன் மூலம், எனது தலைமையில் 37 பிரதேச சபை உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

நிச்சயம் எனது சேவைகளும் தமிழ் மக்களுக்காக தொடரும் வேளை, சுதந்திரமான தேசிய பயணத்திற்காக எனது சேவை செயலாக்கம் பெறும் என உறுதிப்படுத்துகிறேன்

தேசியம் எனும் போர்வையில் பலர் தடைகளை ஏற்படுத்தியும் சற்றும் தளராது இலட்சியப் பயணத்தில் இணைந்த உங்களினால் இலக்குகளை நோக்கி வெற்றிநடை போட முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ம)

# மகிந்தவின் ஊடக இணைப்பாளரது வீட்டில் நிதிமோசடி பிரிவினர் தேடுதல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் ரொஹான் வெலிவிட்டவின் இல்லத்தில் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

சி.எஸ்.என் தனியார் ஊடக நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றை பதிவுசெய்துகொள்வதற்காக இம்மாதம் 13ஆம் திகதி முன்னிலையாகுமாறு ரொஹான் வெலிவிட்டவுக்கு பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே ஹோமாகம பகுதியிலுள்ள அவரது இல்லத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் விஜயம் செய்த பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு அதிகாரிகள் அங்கு சோதனை நடத்தியுள்ளனர்.

இந்த சோதனை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் கொழும்பு இராஜகிரிய-நெலும் மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் ரொஹான் வெலிவிட்ட இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலுள்ள பல சபைகளில் கூடிய ஆசனங்களை கைப்பற்றியிருந்தபோதிலும், பெரும்பான்மையாக பல சபைகளில் தனித்து ஆட்சி அமைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 151 ஆசனங்களை கைப்பற்றி முன்னணியில் உள்ளது.

வலிகாமம் வடக்கில் அமோக வெற்றியடைந்த போதிலும் ஏனைய பல சபைகளிலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் ஆசனங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோன்று கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் உள்ள அனைத்து சபைகளிலும் கூடிய ஆசனங்களை கைப்பற்றியுள்ள நிலையில், பெரும்பான்மை ஆசனங்களை கொண்டு சில சபைகளையே ஆட்சி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (ம-9)

## கூட்டு ஆட்சிக்கு...

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

தேர்தலில் உத்தியோக பூர்வமான முடிவுகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டு வந்தது.

இந்நிலையில் தேர்தலில் முதன்முதலாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக தேர்தலில் களமிறங்கிய தமிழ் காங்கிரஸ் வடக்கில் பருத்தித்துறை நகர சபை மற்றும் சாவகச்சேரி நகர சபை போன்றவற்றை தன் வசப்படுத்தியதுடன் ஏனைய பிரதேச சபைகளிலும் கூட்டமைப்புக்கு கடுமையான சவால்களை கொடுத்துள்ளது.

இதனால் யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் ஏனைய பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளிலும் எந்தக் கட்சியும் அறுதி பெரும்பான்மையை பெறாத நிலையில் கூட்டாட்சி அமைக்க கடும் பிரயத்தனத்தில் கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம)

## இரண்டு பிரதேச...

.ஒவ்வொரு சபைகளிலும் கணிசமான ஆசனங்களை பெற்று மொத்தமாக 81 ஆசனங்களை பெற்றுள்ளது. அதில் ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பிரதேச சபைகளில் அதி கூடிய வாக்குகளை பெற்று தன்வசமாக்கியுள்ளது.

அதே போன்று கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டு பெரும்பாலான சபைகளில் ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. (ம-9)

## மாத்தறை மாவட்டத்தில்...

என்பவரும்,

மாத்தறை மாவட்டத்தின் கண்டலிப்பாய் தொகுதியில் பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட தமிழ்ப் பெண் ஒருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் இவ்விரண்டு வட்டாரங்களையும் உருவாக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எல்லை நிர்ணய சபைக்குப் பரிந்துரை செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

**மகி...** என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன தெரி வித்தார். நாட்டு மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த வுடனும் தாமரை மொட்டு சின்னத்துடனும் இணை ந்திருக்கின்றனர். ஆகவே அரசாங்கத்தின் பிரதான தலை வர்கள் இருவரும் படுதோல்வியைச் சந்தித்துள்ளனர். அவ்விருவரினதும் கட்சிகள் எப்போதுமில்லாதவாறு சரி வைச் சந்தித்துள்ளன.

அவ்விரு தலைவர்களாலும் நாட்டின் பிரச்சினை யைத் தீர்க்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரங்களின் போது தெரிவித்து வந்தார். அதனை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். கூட்டு எதிர்க் கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை யகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தினேஷ் குணவர் தன இதனைத் தெரிவித்தார். (ம)

**மக்...**

அரசியல் மாற்ற த்திற்கு மக்கள் எம க்கு பொறுப்பு வழங் கினர். அதே மக்கள் ஆணை அவ்வாண் டின் ஒகஸ்ட் மாத மும் கிடைக்கப்பெற் றது. இந்நிலையில் எம்மீது சுமத்தப் பட்ட பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றுவோம்.

இதன்படி இரு முறை மக்கள் ஆணையை வழங்கி எம்மீது சுமத்திய பொறுப்புகள் அனை த்தையும் உரிய முறையில் நிறை வேற்றுவோம் என் றும் அவர் குறிப்பிட் டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறு பேறுகள் தொடர்பில் அமைச்சர் ஊடகங் களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)


**Techno World** A/L தொழில்நுட்ப பிரிவு
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L 2020 - திங்கள் - வெள்ளி 8.00 - 12.00
A/L Day Class - திங்கள் - வெள்ளி
வார நாட்களில் பகலில் நடைபெறும் 8.00 - 1.00
ஒரேஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 0770175346
(C-1569)

சகல விதமான சளி இருமல்களிற்கு சிறந்த மூலிகை இருமல் பாணி
எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி
100% இயற்கையானது



உள்ளடக்கம்
ஆடாதோடை, திப்பலி, அதிமதுரம், கண்டங்கத்தரி, சிறு தேக்கு, மிளகு, பனங்கற்கண்டு.
தொடர்ந்து பாவித்து வருவதன் மூலம் ஆஸ்மா நோய் தணிவடையும்
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தயாரிப்பு:- எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் **பிரமநாதன் and Co**
எண் 28,26, பேரின்ப நாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண் : 0776389356, 0777153571
(1994)

**Dream of Studying MBBS / MD**
China | Belarus | Latvia | Malaysia



SLMC Approved
Sichuan University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
Segi University - Malaysia
Duration: 6 years Medium-English
Limited Seats are available for 2018 intake
Colombo : 076 7013060 107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060 77, Clock Tower Road, Jaffna
ICS Study Medicine Abroad
(C-1560)

**வீடு விற்பனைக்கு**
பருத்தித்துறை பிரதான வீதி, கோப்பாயில் 3பரப்புக் காணி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு :
0778951751,0774312593
(2735)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு



UK-550*/=Kg
கனடா-1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS


**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
➡ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
➡ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்



3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.
UK - 550/=
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 1000/=
**திருமுருகன் கொம் நெற்**
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் கிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது)
077 755 4528
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
(HNB வங்கிக்கு அருகாமையில்)
TCN EXPRESS 208A, Galle Road
(2739)

# நன்றி நவிலல்

## பிரதேச சபைத் தேர்தல் - 2018
## நல்லூர் 7ம் வட்டாரம் (J122, J126)



என் மீது நம்பிக்கை வைத்து எனது வேண்டுதலுக்கு இணங்கி வாக்களித்து வெற்றி பெறச் செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

என்றும் உங்கள்,
சுப்பிரமணியம் விஜயகுமாரன் (விஜயன்)
(2737)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.



**றோயல் குளுக்கோஸ்**
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
உற்சாகம்! புத்துணர்ச்சி!! ஆரோக்கியம்!!!
PACKED BY: ROYAL Industries
Colombo-13 T.P:- 077 727 7670
ஏக விநியோகஸ்தர்கள் சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T:P - 021 222 2567
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(C-1405)

யாழ்ப்பாணத்தில்...
**INTERNET MONEY**
இணையதளம் மூலம் வெளிநாடுகளில் தொழில் செய்து மாதம் மாதம் பெரும் தொகை Dollars களை சம்பாதிக்கும் இலகுவான திட்டம்.
18-02-2018 (ஞாயிறு)
காலை 09 மணி முதல் முழுநேர ஒரு நாள் பயிற்சி பட்டறை.
இது உங்கள் வாழ்க்கை தரத்தை மாற்றக் கூடிய ஒரு வாய்ப்பு விட்டுவிட வேண்டாம்.
இத்துறையில் பெரும் அளவு வருமானம் ஈட்டும் தேர்ச்சி பெற்ற Pradeep (கொழும்பு) மற்றும் குழுவினர் மூலம் நடத்தப்படும்.
பகுதி நேரமாக 100,000 மும் திறமைக்கு ஏற்ப்பவும் தொழில் செய்யும் காலத்திற்கு ஏற்ப்பவும் உங்கள் வருமானம் எல்லை இன்றி அதிகரிக்கும்.
தகுதி :- ஓரளவு ஆங்கில அறிவு
பதிவுக் கட்டணம் 2000/- பயிற்சி கட்டணம் 8000/- மட்டும்
ஆசன முன் பதிவு செய்யவும்.
ஆண் பெண் எவரும் தொடரலாம்
(2716)
**SOFTVIEW IT ACADEMY**
221, Kandy Road, JAFFNA. Call now : 072-6239776

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
● ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
● அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
● கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
● நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
10. மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
✆ 021 222 3536
(C-1556)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.